Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 20 ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 4 (03.04.2006) திங்கட்கிழமை இதழ் 184

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# ஆயுதக்குழுக்களின் விவகாரத்தால் கண்காணிப்புக்குழு - அரசு மோதல்!

கொழும்பு

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதக் குழுக்கள் இயங்கி வருவதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் இலங்கை அரசுக்கு எழுதிய கடிதத்தை அடுத்து அரசுக்கும் கண்காணிப்புக்குழுவுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் இரண்டு பக்கக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

வாழைச்சேனையில் சிவில் உடையில் 10 முதல் 15 வரையிலான ஆயுதபாணிகளை கண்காணிப்புக் குழுவினர் சந்தித்தனர். அவர்கள் தங்களை கருணா குழுவினர் என்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த உடன்படிக்கையை ஏன் கடைப்பிடிக்க வேண்டும்?

### பாதுகாப்பு செயலர் கேள்வி

கொழும்பு

அரசாங்கத்துக்கு எந்தவித பயனுமில்லாத போர்நிறுத்த உடன்படிக்கையை நாம் ஏன் கடைப்பிடிக்க வேண்டும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனிவாவில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பேச்சுக்களில் பங்குபற்றும் அரசதரப்பு பேச்சுக் குழுவினருக்கான கூட்டத்தில் கலந்துகொண்டு பாதுகாப்பு நிலைமை (12 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ, விமானப்படை பதவிகளில் மாற்றம்!

கொழும்பு

இராணுவ மற்றும் விமானப்படையின் உயர்மட்ட பதவிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

விமானப்படையின் தலைமை அதிகாரியாக இருந்த எயர் வைஸ் மார்ஷல் லக்ஷன் சல்காடோ நேற்று முன்தினம் ஓய்வுபெற்றார்.

இதையடுத்து புதிய தலைமையதிகாரியாக நேற்றுமுன்தினம் எயர் வைஸ் மார்ஷல் றொசான் குணதிலக பதவியேற்றுள்ளார்.

விமானப்படையின் பிரதித் தலைமையதிகாரியாகவும், நடவடிக்கைகளுக்கான பணிப்பாளராகவும் இவர் முன்னர் பதவி வகித்திருந்தார். இவர் தலைமை அதிகாரியாக பொறுப்பேற்றதையடுத்து விமானப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் சுற்றிவளைப்பு: ஒரே வீட்டிலிருந்த ஐந்து பேர் கைது

பருத்தித்துறை

பருத்தித்துறை நகரப் பகுதியில் நேற்று அதிகாலை இராணுவத்தினர் பெருமெடுப்பில் நடத்திய சுற்றிவளைப்பு தேடுதல்களின்போது தந்தை, தாய் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை - இரண்டாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த கிருஸ்ணராஜா (வயது 46), அவரது மனைவி கலாவதி (வயது 39), இவர்களது பிள்ளைகளான உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவி கிருஸ்ணராஜா ரஞ்சினி (வயது 21), ஹாட்லிக் கல்லூரி மாணவன் கிருஸ்ணராஜா திவாகரன் (வயது 17) ஆகியோருடன் இவர்களது வீட்டில் தங்கியிருந்த வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த ஹாட்லிக் கல்லூரி மாண வன் விஜயகாந்த் (வயது 18) ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் பவள் கவச வாகனங்கள் சகிதம் வந்திறங்கிய நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் - பருத்தித்துறை நகரப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியபோது - இரண்டாம் குறுக்குத்தெருவிலுள்ள வீடொன்றிலிருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான செயலக தலைவராக பாலித கொகன்ன!

கொழும்பு

அரசாங்க சமாதான செயலகத்தின் புதிய தலைவராக பாலித கொகன்ன விரைவில் பொறுப்பேற்கவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஐ.நா.வின் ஒப்பந்தங்கள் தொடர்பான பிரிவின் தலைவராகப் பொறுப்பு வகித்த பாலித கொகன்ன - அண்மையில் அந்தப் பதவியிலிருந்து விலகி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகராக பதவியேற்றார். அத்துடன், ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுக்களிலும் இவர் அரசதரப்பு பிரதிநிதியாக கலந்துகொண்டார்.

சமாதான செயலகத்தின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை வெல்லமுடியாது!

## நோர்வே விசேட தூதர் பௌயர்

# புலிகளை வெல்லமுடியாது!

## ஹொக்லண்ட் கருத்தால் கோத்தபாய சீற்றம்

கொழும்பு —

விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவத்தால் வெல்லமுடியாது என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்த கருத்துத் தொடர்பாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கடும் விசனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில வார இதழொன்று வெளியிட்டிருக்கும் செய்தியில் -

விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவத்தால் வெல்லமுடியாது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் ஒரு வாரத்துக்கு முன்னர் ஹக்ரப் ஹொக்லண்ட் கூறியுள்ளார்.

மேலும், விடுதலைப் புலிகள் இயக்கமானது அல்கொய்டா போன்று பயங்கரவாத இயக்கம் அல்ல என்றும் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதைக் கேட்டு கடும் கோபத்துடன் பதிலளித்த கோத்தபாய ராஜபக்ஷ -

இங்கே நீங்கள் வேலை செய்யத்தான் வந்துள்ளீர்கள். அதைச் சரியாகச் செய்யுங்கள். பாரபட்சமாக நடக்காதீர்கள் என்று கூறியுள்ளார். மேலும் ஹக்ரப் ஹொக்லண்டுக்கும் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் உல்ப் ஹென்றிக்சனுக்கும் சில அறிவுரைகளையும் கோத்தபாய ராஜபக்ஷ அளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் கலாசாரத்தை - வரலாற்றை முதலில் கற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

சிங்களவர்களும் தமிழர்களும் பல தசாப்த காலங்களாக ஐக்கியமாகவே வாழ்ந்து வருகின்றனர். நீங்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே விசேட தூதர் பௌயர இன்று இலங்கை வருகிறார்!

## இந்தியாவுக்கும் செல்கிறார்

கொழும்பு —

இலங்கை சமாதான முயற்சிகளுக்கான விசேட தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் ஜோன் ஹன்சன் பௌயர் இன்று முதல் தடவையாக இலங்கை வரவுள்ளார். இவர் சமாதான முயற்சிகள் தொடர்பாக விளக்கமளிக்க இந்தியாவுக்கும் செல்லவுள்ளார்.

அண்மையில் இலங்கை சமாதான முயற்சிகளுக்கான விசேட தூதுவராக நோர்வே அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட - ஹன்சன் பௌயர் இன்று கொழும்பு வரவுள்ளார்.

அவர் கொழும்பில் தங்கியிருக்கும்போது அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துவார். நாளைமறுதினம் கிளிநொச்சிக்கு(12 ஆம் பக்கம் பார்க்க)

# சுவிஸில் புலிகளின் பயணத்தை தடைசெய்ய கோருகிறது அரசு!

கொழும்பு —

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இந்த மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ள பேச்சுக்களின் பின்னர் - விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் பயணங்களை தடைசெய்யுமாறு சுவிஸ் அரசாங்கத்திடம் அரச பேச்சுக்குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா கோரியுள்ளார்.

கொழும்பில் சுவிஸ் தூதுவர் பெர்னாண்டினோ ரெகஜ்ஜொனியை கடந்த வாரம் சந்தித்தபோதே நிமால் சிறிபால டி சில்வா இதை வலியுறுத்தினார்.

பெப்ரவரி பேச்சுக்களுக்குப் பின்னர் 5 நாட்கள் மேலதிகமாக ஜெனிவாவில் தங்கியிருந்த விடுதலைப் புலிகள் - நிதி சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும், இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்துள்ள தமிழர்களுடன் அவர்கள் சந்திப்புக்களை நடத்தியதாகவும், சுவிஸ் அரசாங்கத்திடம் குற்றச்சாட்டுக்களைஅவர் முன்வைத்தார்.

ஜெனிவாவில் ஏப்ரல் 19 இல் தொடங்கவுள்ள பேச்சுகளுக்கான இடம் தொடர்பாகவும் சுவிஸ் தூதுவருடன் நிமால் சிறிபால டி சில்வா விவாதித்தார்.

பெப்ரவரி பேச்சுக்கள் நடைபெற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய இதழில்

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான ஆசிரியர் அ.லோகநாதனின் இரசாயனவியல் மாதிரி வினாத்தாள் வெளிவருகிறது.

# குடும்ப புனர்வாழ்வு நிறுவன உப அலுவலகம் திறப்பு விழா!

யாழ்ப்பாணம் —

குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்தின் வடமராட்சி-தென்மராட்சி ஆகிய இடங்களுக்கான உபஅலுவலகம் இன்று காலை 10 மணிக்கு மந்திகை வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை நிலையத்தின் மேல்மாடியில் திறக்கப்படவுள்ளது.

இளைப்பாறிய நூலகர் என்.திருச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை பிரதமவிருந்தினராகவும்,

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், பருத்தித்துறை பிரதேசசபையின் செயலாளர் எஸ். பசுபதி, புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பெனடிற் ஆறுமுகநாதன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி கலாநிதி சி.வசீகரன், ஓய்வு பெற்ற கிராம அலுவலர் வி.சேதுநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கோண்டாவிலுக்கு வந்த ஈ.பி.டி.பி.யினரால் பதற்றம்!

கோண்டாவில் —

நல்லூர் பிரதேசசபையின் கோண்டாவில் பொதுநூலகத்தை பார்வையிடுவதற்கு நேற்றுக்காலை 11 மணியளவில் திடீரென இரண்டு பிக்கப் வாகனங்களில் பெருமளவான இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருடன் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் சிலர் வந்திறங்கியதால் அந்தப்பகுதியில் பெரும் பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது.

நல்லூர் பிரதேசசபையினரால் புனரமைப்பு செய்யப்பட்டு முழுமை பெறாத நிலையில் இந்தப் பொது நூலகம் காணப்படுவதால், தம்மால் ஒதுக்கப்படுகின்ற நிதியிலிருந்து கட்டட மிகுதி வேலைகளை ஆரம்பிப்பதற்காகவே அவர்கள் பார்வையிட்டு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் அந்த இடத்தில் வந்திறங்கியதும் பெருமளவு இராணுவத்தினரும், பொலிஸாரும் அந்த வீதிகளில் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டதால், அந்தப்பகுதி மக்கள் பதற்றத்துடன் காணப்பட்டனர். (82)

## கலைப்பீட இறுதியாண்டு பரீட்சைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இறுதி வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் அனைத்தும் திட்டமிட்டபடி எதிர்வரும் புதன்கிழமை ஆரம் மாகும் என கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார்.

## குருநகர் இறங்குதுறையை பலப்படுத்தும் படையினர்

கொக்குவில் —

குருநகர் கடற்கரை பகுதிகள் மற்றும் இறங்குதுறை ஆகிய இடங்களில் அமைந்துள்ள படையினரின் காவலரண்கள், சோதனைச் சாவடிகள் பலப்படுத்தப்படுகின்றது.

கடலில் போடப்பட்டுள்ள இறங்கு துறை மேடையில் பதினைந்து அடி உயரத்தில் புதிதாக காவலரண்கள் அமைத்து பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் எடுத்துச் செல்லும் பொதிகளை சோதனை இடுவதோடு உள்ளே எடுத்து வரப்படுகின்ற மீன் பறிகள், கொள்கலன்கள் என்பவற்றை துருவித்துருவிப் படையினர் சோதனையிட்டு வருகின்றனர். (206)

## சாம்ரெக் ஊழியர்களுக்கு

யாழ்ப்பாணம் —

சாம்ரெக் நிறுவனத்தில் பணிபுரிந்த பணியாளர்களில் இதுவரை மார்கழி, தை மாத கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளாத பணியாளர்கள் இன்று காலை 10 மணிக்கு பளை மாணவர் பேரவை அலுவலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையி னர் அறிவித்துள்ளனர்.

## கெருடாவில் பாடசாலை விரைவில் திறக்கப்படும்!

சாவகச்சேரி

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட தற்போது இயங்காதிருக்கும் கெருடாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை மீள ஆரம்பிக்குமாறு அந்தப்பகுதி மக்கள் தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதையடுத்து வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஆ.வேதநாயகம் அந்தப் பகுதி பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடிய பின்னர் பாடசாலையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (29)

## நாட்டுப் பற்றாளர் குடும்பத்தினருக்கு

கிளிநொச்சி —

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு உறுதுணையாக நின்று சாவடைந்த நாட்டுப்பற்றாளர்கள் நினைவுகூரப்படவுள்ளனர்.

இதற்கமைய வெளிமாவட்டங்களிலிருந்து வந்து கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் நாட்டுப்பற்றாளர் குடும்பங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பிரதேசத்துக்கு உட்பட்ட அரசியல்துறை பிரதேச செயலகங்களில் பதிவு செய்யுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் தெரிவித்தார்.


ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த



மெர்குரிப்பூக்கள்

பு. நேரம் : 10.30,2.30, 6.30,9.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம்

நந்தா தேஜாஸ்ரீ மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த

கோடம்பாக்கம்

தினசரி நான்கு காட்சிகள்

கா. நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)




காட்சி:10.30, 1.30, 4.30, 7.30-(பு.நேரம்) விசேட காட்சி இரவு 10.00

நிறைஞ்சனாஸ் சங்கானை

தங்கர்பச்சான், நவ்யா நாயர் நடித்த

சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி

கா.நே:(பு.நே) 11.00, 2.45, 6.00


# மாவட்டச் செயலகம் – கிளிநொச்சி

## பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோருதல்

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உள்ள செயற்திட்ட அலுவலகங்களுக்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் " அரசாங்க அதிபர் "மாவட்டச் செயலகம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு 15.04.2006 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பதவிகள்**

**CADREP இணைப்பாளர்**

தகைமைகள்

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்
2. இணைப்பாளர் அனுபவம் குறைந்தது மூன்று வருடங்களாக இருத்தல் வேண்டும்.
3. கணினித் துறையில் போதிய தராதரமும், ஆங்கிலத்தில் புலமையுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**தொழில்நுட்ப உத்தியோகத்தர்**

தகைமைகள்

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி
2. தேசிய தொழில்நுட்ப சான்றிதழ்(NCT)
3. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் (NDT) அல்லது
4. கட்டட நிர்மாண தொழில்நுட்பச் சான்றிதழ் (BCT) அல்லது
5. தொழில்நுட்ப சேவையிலுள்ள அனுபவமும் அதுசம்பந்தமான தராதரங்களும்

**தகவல் முகாமைத்துவ உதவியாளர்**

தகைமைகள்

1. க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகம்/கணிதம்/ விஞ்ஞானத்துறையில் சித்தியடைந்தவராகவும்
2. கணினித் துறையில் டிப்ளோமா உட்பட உயர்தராதரங்களைக் கொண்டவராகவும்
3. ஆங்கிலத்தில் புலமை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**வாழ்வாதார உத்தியோகத்தர்கள்**

தகைமைகள்

1. பொருளாதாரம்/வர்த்தகம் /முகாமைத்துவம்/வரலாறு ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
2. ஆங்கிலத்திலும், கணினித்துறையிலும் போதிய தராதரமும் புலமையும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : சகல பதவிகளுக்கும் த குதியுள்ள, கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி.

(4456)


நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த. உயர்தரம் - 2006 பரீட்சைக்குத்
தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான
முன்னோடிக் கருத்தரங்கு

எங்கு?
எப்போ?
எப்படி?

விபரம் வெகு விரைவில் உங்கள் அபிமான நாளிதழ் நமது ஈழநாடு பத்திரிகையில்...

அனுசரணை வழங்குபவர்கள்: UNIT One Step Ahead 0773134737 / 0214590720

தேசத்தின் வங்கியாளர்
இலங்கை வங்கி
BOC

LONDON ENGLISH COLLEGE
105, Arasady Road, Jaffna. T.P : 222 - 5
FOR ALL ENGLISH CLASSES

- Diploma in English — Duration : 3 Months
- IELTS — Duration : 3 Months
- Spoken English — Duration : 3 Months
- English Litterature (10, 11, 12, 13) — Duration : Annul
- English for KIDS — Duration : Annul
- Linguistics - GAQ, B.A

இதோ! புத்தம் புதிய கிரபிக்ஸ் வெளியீடுகள்!
Video Mixing க்குத் தேவையான Animation Title Backgrounds, DVD க்களில....
CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
Phone: 0777917610

AIMS
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
#118, Palaly Road, Thirunelvely, Jaffna.
Center for FOSS & LAMP

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam
Leading IT Institution in Jaffna

COMMERCIAL BANK
கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

# 5 லட்சம் ரூபா லஞ்சம் கொடுத்ததாக மஹ்ரூப் மீது சங்கதாஸ குற்றச்சாட்டு!

கொழும்பு—

கொழும்பு மாவட்ட ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் தனக்கு 5 லட்ச ரூபா காசோலையை வழங்கியதாக கொழும்பு மாநகர சபை உறுப்பினரான ரி.எம். சங்கதாஸ பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரசபைக்கான வேட்பாளர் பட்டியலில் 18 வயது பூர்த்தியடையாத ஒருவரைச் சேர்த்துக் கொண்டமையால் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியல் நிராகரிக்கப்பட்டது.

கொழும்பு நகர சபை உறுப்பினரான ரி.எம். சங்கதாஸவின் பெயரை வேட்புமனுவிலிருந்து நீக்கிவிட்டு, அந்த இடத்துக்கு நாடாளுமன்றஉறுப்பினர் மஹ்ரூப்பின் ஆதரவாளரான 18 வயது பூர்த்தியடையாத ஒருவரை சேர்த்துக்கொண்டமையாலேயே அந்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

வேட்புமனு நிராகரிப்பு தொடர்பாக கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹ்ரூப் மற்றும் மிலிந்த மொறகொட ஆகியோருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், கடந்த 24 ஆம் திகதி தனது கையடக்கத்தொலைபேசியில் தொடர்பு கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப்- தன்னையும் மிலிந்த மொறகொடவையும் தாக்குவதை நிறுத்துமாறும், தேவையான எதனையும் செய்வதற்கு தான் தயாராக இருப்பதாகவும் கூறியதாக சங்கதாஸ கூறியுள்ளார்.

சிறு பரிசை பெட்டியில் வைத்திருப்பதாகவும், இதனைப் போன்று பத்துமடங்கு பரிசுகளைத் தருவதற்கும் தயாராக இருப்பதாக மஹ்ரூப் கூறியதாகவும் சங்கதாஸ தெரிவித்தார். பெட்டியைத்திறந்து பார்த்தபோது 5 லட்சத் துக்கான காசோலை இருந்ததாக தெரிவித்த சங்கதாஸ- தன்னை யாரும் விலைகொடுத்து வாங்கமுடியாது என்றும், இது குறித்து முதலில் ஊடகங்களுக்குத் தெரிவிப்பதாகவும், பின்னர் மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் கூறினார்.

# தேர்தல் முடிவுகளால் கட்சிகளுக்குள் மாற்றம்

கொழும்பு—

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முடிவுகள் தென்னிலங்கை கட்சிகளிடையே பல முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தும் என கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

இதன்படி தேர்தல் முடிவுகளுக்கமைய சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே. கட்சி, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியன பல்வேறு முடிவுகளை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளன.

தேர்தலுக்கு முன்னரேயே இந்தக் கட்சிகள் பல்வேறு வகையான பேச்சுக்களை நடத்தியுள்ளன. தேர்தல் முடிவுகளையடுத்து ஜே.வி.பி. பல தீர்மானங்களை எடுக்க முடிவுசெயதுள்ளது. அவர்கள் எடுக்கவுள்ள தீர்மானங்கள அரசின் நிலைப்பாட்டுக்கு நேரடியாகவே அழுத்தம் கொடுப்பதாக அமையுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய படுதோல்வியடைந்துள்ளமையால் அந்தக் கட்சியைக் கலைத்துவிட்டு சுதந்திரக் கட்சியுடன் இணைவதற்கு ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், ஜனாதிபதியின் சமாதான முயற்சிகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி அதனை முன்னெடுத்துச் செல்வதற்காக தேசிய உடன்பாட்டைத் தயாரிக்கும் வகையில் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தே)

# புலிகளின் நிதி சேகரிப்பை கண்டறிவதற்கு சர்வதேச ஆணைக்குழு நியமிக்க வேண்டும்

## பிரிட்டன் அதிகாரிகளிடம் சமரவீர தெரிவிப்பு



கொழும்பு—

விடுதலைப்புலிகள் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடம் நிதி சேகரிப்பது குறித்து கண்டறிவதற்கு சர்வதேச ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர பிரிட்டன் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரிட்டனின் உள்துறைச் செயலர் ஜக் ஸ்ரோ உட்பட முக்கிய அதிகாரிகளைச் சந்தித்த வேளையே வெளியுறவு அமைச்சர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறு சர்வதே ஆணைக்குழு அமைக்கப்படுமாயின், அதில் சாட்சியமளிப்பதற்கு, வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் முன்வருவரென தன்னிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர பிரிட்டன் அதிகாரிகளிடம் தெரிவித்தார். (தே)

# இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைவதற்கு ஆர்வம்!

கொழும்பு—

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரண்டும் அரசுடன் இணைந்து கொள்வதற்கு ஆர்வம் காட்டி வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்துள்ள செயற்திட்டத்துக்கு நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகள் மேலும் பலத்தை அதிகரிக்கும் வகையில் மக்கள் அங்கீகாரம் அளித்துள்ள இந்தவேளை- அரசுடன் இணைவதனால் அந்த செயற்திட்டத்தை மேலும் முன்னெடுக்க முடியுமென்பது இரண்டு கட்சிகளதும் நிலைப்பாடாகவுள்ளது.

எனவே, அரசுடன் இணைந்து கொள்ள இது சரியான தருணமென இரண்டு கட்சிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த வாரத்தில் இரண்டு கட்சிகளும் தமது அரசியல் செயற்குழுவைக் கூட்டி தற்போதைய அரசியல் நிலை குறித்தும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் குறித்தும் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

பாகிஸ்தானுக்கு சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதும் இது தொடர்பாக இரண்டு கட்சிகளதும் தலைவர்கள் பேச்சு நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## நீர்கொழும்பு சிறையில் கைதிகள் உண்ணாவிரதம்

கொழும்பு—

நீர்கொழும்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

குடிவரவு குடியகல்வு சட்டங்களை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டனர்.

தம்மீதான குற்றச் சாட் டுக்களை விசாரணை செய்யுமாறும், இல்லையேல் தங்களை விடுதலை செய்யுமாறும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகள் கோரிக்கை விடுத்தனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் பலர் மீன்பிடிப் படகுகள் மூலமாக மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல முற்பட்டவேளை கைதுசெய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# விடுதலைப் புலிகளின் தலைவரை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு!

கொழும்பு—

போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்த வழக்கில் பிரதான பிரதிவாதியாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை அடுத்த மாதம் 24ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவருக்கான அழைப்பாணையை கிளிநொச்சியிலுள்ள சமாதான செயலகத்தின் ஊடாக அனுப்புமாறும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியும் தாக்கல் செய்த மனுவுக்கே, உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

உயர் நீதிமன்ற நீதிபதி சிறிஸ் கந்தராஜா முன்னிலையில் அடுத்த மாதம் 24 ஆம் திகதி இந்த முறையீடு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளது. (தே)

# சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம்

கொழும்பு—

அரச சேவைகளில் ஏற்பட்டுள்ள சம்பள முரண்பாடு குறித்து ஆராய்ந்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

அரசியலமைப்பின் 33 ஆவது பிரிவுக்கமைய இந்த நியமனத்தை ஜனாதிபதி அறிவித்தார்.

தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவால் எதிர்வரும் காலங்களில் தேசிய கொள்கைகளுக்கமைய சம்பளங்கள் தயாரிப்பு தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்.

மேலும், காலத்துக்குக் காலம் உரிய சம்பள மறுசீரமைப்புக்களை மேற்கொள்வது சம்பந்தமாக அரசாங்கத்துக்கு பரிந்துரைகளைச் செய்வதுடன், அரச நிறுவனங்களின் ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் நடவடிக்கைகளையும் இந்தக்குழு மேற்கொள்ளும்.

தேசபந்து லயனல் பெர்னாண்டோ மற்றும் சாலிய மடிவெல ஆகியோர் இந்த ஆணைக்குழுவின் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆணைக்குழுவில் 12 பேர் உறுப்பினர்களாக இருப்பார்.

## வேலையற்ற இளைஞர்களுக்கு

# கட்டுமான பயிற்சிகள் வழங்க மாகாண சபையால் ஏற்பாடு

கொழும்பு—

இளைஞர்களுக்கு அடிப்படைக் கட்டுமானப் பயிற்சி நெறியை வழங்குவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வேலையில்லாப் பிரச்சினையை தீர்ப்பதற்கும், கட்டுமானத்துறையில் ஏற்பட்டுள்ள அதிகரித்த கேள்வியை நிவர்த்திசெய்யும் வகையிலும் இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அத்தோடு இளைஞர்களுக்கு சான்றிதழ் பயிற்சியை குறுகிய காலத்தில் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சிநெறியில் நீர் விநியோகம், வடிகால்அமைப்பு, நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்தியும் கட்டட நிர்மாணமும், குடிசார் பொறியியல் தொழில்நுட்பம்சார் பயிற்சிநெறிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் பங்கு கொள்ளும் பயிற்சியாளர் ஒருவருக்கு பயிற்சி பெறும் நாளில் இருநூறு ரூபா வீதம் உதவு தொகை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரண்டு இலட்சம் அரச ஊழியர்கள் இன்று சத்தியாக்கிரகப் போராட்டம்

கொழும்பு—

2006.01 அரச சேவை சம்பள சுற்றறிக்கை தொடர்பாக இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து பல தொழிற்சங்கங்களை சேர்ந்த 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் இன்று சுகவீன விடுமுறையால் அரச பணிகளிலிருந்து வெளியேறி கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

சுகாதார, அஞ்சல் ,கல்வி, தொழில்நுட்பம் மற்றும் உள்ளூராட்சி நிர்வாகங்களிலுள்ள தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச பிரிவுகள் சம்பள மீளாய்வு தொழிற்சங்க குழுவின் அமைப்பாளர் அமல் ரட்ணபிரிய தெரிவித்தார்.

இடைநிறுத்தப்பட்ட 2006.01 சுற்றறிக்கை தொடர்பாக புதிய சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் கிடைக்கும் வரை அரச ஊழியர்களுக்கு 3000 ரூபா சம்பள அதிகரிப்பு இல்லையெனில் 2006.01 சுற்றறிக்கை மூலம் அரச சேவையில் உயர்தரங்களுக்கு வழங்கிய 65 வீத சம்பள அதிகரிப்பை எந்தவித பேதங்களுமின்றி அனைத்து அரச ஊழியருக்கும் வழங்கி அதனை செயற்படுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கிலேயே இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

## அரச சமாதான செயலக பிரதி செயலாளர் நாயகம்

கொழும்பு—

அரசாங்க சமாதான செயலகத்தின் பிரதி செயலாளர் நாயகமாக கேதீஸ்வரன் லோகநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மாற்று கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் சபையிலிருந்து இவர் அண்மையில் இராஜினாமா செய்திருந்தார்.

அத்துடன், இவர் சமாதானம் தொடர்பான பல்வேறு நிறுவனங்களிலும் கடமையாற்றி வருபவர் .1985 ஆம் ஆண்டில் இடம் பெற்ற திம்பு பேச்சுவார்த்தையிலும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறுநீரக நோய்க்கு ஆளாவோர் வடக்கு - கிழக்கிலேயே அதிகம்!

கொழும்பு—

சிறுநீரக நோய்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை வடக்கு - கிழக்கு மாகாணத்திலேயே அதிகமாக இருப்பதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுநீரக பாதிப்பு ஏற்படுவதற்கு மேற்படி பிரதேசத்தில் நிலத்தடி நீரில் உள்ள தாது உப்புக்களும் மக்களால் பாவிக்கப்படும் உலோக பாத்திரங்களும் பிரதான காரணங்கள் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை - சிறுநீரக பாதிப்புக்குள்ளாவோரின் எண்ணிக்கை வட மாகாணத்தில் தொடர்ந்து அதிகரித்து வருவதாக யாழ். போதனா வைத்திய சாலை டொக்டர் எஸ்.பேரானந்தராஜா தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வடமாகாணத்தில் 60 பேர் சிறுநீரகப் பாதிப்புக்குள்ளான நிலையில் மேலும் புதிதாக 10பேர் இந்த நோய்க்கு ஆளாகி இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜனாதிபதி மகிந்தவுடன் படை அதிகாரிகள் சந்திப்பு

கொழும்பு—

நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக செயற்படும் போது முப்படைகள் மற்றும் பொலிஸார் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக- நாளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் படை அதிகாரிகளுக்குமிடையே கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கெதிராக செயற்படும் போது படை அதிகாரிகள் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும், எனவே நாளை நடைபெறும் கலந்துரையாடலில் இது குறித்தும் பேசப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (தே)

## மூன்றாவது டெஸ்ட் போட்டியின்

# முதல் இனிங்ஸ் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா முன்னிலை



ஜொகனஸ்பேர்க் —

அவுஸ்ரேலிய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே ஜொகனஸ்பேர்க்கில் நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி தனது முதலாவது இனிங்ஸில் 270 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முதல்நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

நேற்றுமுன்தினம் அவுஸ்ரேலிய அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. அந்த அணியின் லாங்கரும், ஹைடனும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இதில் லாங்கர் ஓட்டமெதையும் பெறாமல், என்ரினி வீசிய பந்தில் தலையில் காயமடைந்து மைதானத்தைவிட்டு வெளியேறினார்.

அவருக்குப் பதிலாக பொண்டிங் களமிறங்கினார். அந்தவேளை, 3 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த ஹைடன், என்ரினி வீசிய பந்தை கிப்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து மார்ட்டின் களமிறங்கி



னார். அவர் 2 பவுண்டரிகள், ' சிக்ஸர் அடங்கலாக 21 ஓட்டங்களைப் பெற்று என்ரினி வீசிய பந்தை நெல்லிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து ஹூசே, களமிறங்க, 5 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொண்டிங், என்ரினி வீசிய பந்தை டி-வில்லியர்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய சைமன்ஸ் 4 ஓட்டங்களைப் பெற்று, என்ரினியின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையிலும், கில்கிறிஸ்ட் 12 ஓட்டங்களைப் பெற்று நெல் வீசிய பந்தை ரூடொல்ப்பிடம் பிடிகொடுத்தும் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இந்தநிலையில் ஹூசேயுடன், வோன் இணைந்தார். அவர் அதிரடியாக ஆடி 7 பவுண்டரிகள் அடங்கலாக 36 ஓட்டங்களைப் பெற்று என்ரினி வீசிய பந்தை பொலக்கிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்து லீ களமிறங்கி அதிரடியாக ஆடினார். ஆனால், சிறப்பாக ஆடி 11 பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹூசே, போஜே வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய கஸ்பரோவிச் 2 ஓட்டங்களைப் பெற்று பொலக் வீசிய பந்தை கிப்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியாக ஸ்ருவர் கிளார்க் களமிறங்க, சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த லீ - 6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 64 ஓட்டங்களைப் பெற்று என்ரினி வீசிய பந்தை போஜேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


இதனால் அவுஸ்ரேலிய அணி 270 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. கிளார்க் ஓட்டமெதையும் பெறாத நிலையில் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் என்ரினி 6, நெல், பொலக், போஜே மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.



இதன்படி டி-வில்லியர்ஸுடன், கிப்ஸ் தொடக்க ஆட்டக்காரராகக் களமிறங்கினார்.



இதில் டி-வில்லியர்ஸ் 4 ஓட்டங்களுடன் ஸ்ருவர்ட் கிளார்க் வீசிய பந்தில் போல்டானார்.

அடுத்து டிப்பென்னர் களமிறங்கினார். இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்க அணி 1 விக்கெட் இழப்புக்கு 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கிப்ஸ் 3 ஓட்டங்களுடனும், டிப்பென்னர் ஓட்டமெதையும் பெறாத நிலையிலும் ஆடுகளத்தில் உள்ளனர்.

## விளையாட்டு

# நல்லூர் பிரதேச செயலகமட்ட விளையாட்டுப்போட்டி முடிவுகள்

நெடுந்தீவு —

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக மட்டத்தில் இடம்பெற்ற 2006ஆம் ஆண்டுக்கான குழு விளையாட்டு நிகழ்வுகளது முடிவுகள் செயலக விளையாட்டு அவையினால் வெளியிடப்பட்டுள்ளது.

ஆண்களுக்கான கபடி இறுதிப் போட்டி திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இதில் துர்க்கா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காந்தி விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் 72:71 என்ற புள்ளிகளின் அடிப்படையில் துர்க்கா விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றதுடன், இந்தக் கழகத்தின் எஸ்.திவாகரன் சிறந்த விளையாட்டு வீரராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி கொண்டலடி ஞான வைரவர் கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் போட்டியிட்டு இரு நேர் செட்களில் 25:20, 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றதுடன், சிறந்த வீரராக எஸ்.கதீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக் கழகம் போட்டியிட்டு 2:1 என்ற கோல்கள் அடிப்படையில் பொற்பதி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றதுடன், சிறந்த வீரராக பொற்பதி விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த என்.ஜெயதீபன் தெரிவு செய்யப்பட்டார்.

ஆண்களுக்கான எல்லே இறுதிப் போட்டியும் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் அரியாலை காந்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அரியாலை ஸ்ரீகலைமகள் விளையாட்டுக்கழகம் போட்டியிட்டு 1:0 என்ற ஓட்ட எண்ணிக்கையில் அரியாலை காந்தி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றதுடன், இதே அணியைச் சேர்ந்த வி.சுகிர்தன் சிறந்த எல்லே துடுப்பாட்ட வீரராகவும், எஸ்.கோபிநாத் சிறந்த களத்தடுப்பு வீரராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 5 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் 5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றதுடன், 34 ஓட்டங்களால் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றதுடன், இந்த அணியின் ஆர்.சனுஜா சிறந்த விளையாட்டு வீராங்கனையாகவும், ஆட்டநாயகியாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஈ.ராகவி சிறந்த பந்துவீச்சாளராகவும், ஈ.வினோஜா சிறந்த களத்தடுப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டியும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கே.சி.சி.சி வில்ளையாட்டுக் கழகம் போட்டியிட்டு 32:31 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றதுடன், இதே கழகத்தைச் சேர்ந்த பி.சயநிஜா சிறந்த விளையாட்டு வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டார். (113)



இன்று பாகிஸ்தானுக்கெதிராக இலங்கை அணி ஆடவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டி சனத் ஜெயசூர்யவுக்கு முக்கியமான போட்டியாக அமைந்துள்ளது.

ஏனெனில் இதுதான் ஜெயசூர்யவின் இறுதி டெஸ்ட் போட்டியாகும். 20 வருட டெஸ்ட் வரலாற்றைக் கொண்ட இலங்கை அணியில் 15 வருடங்கள் விளையாடியுள்ள அவருக்கு இந்தப் போட்டி 102ஆவது போட்டியாகும்.

எனவே, முக்கியம் வாய்ந்த இந்தப் போட்டியில் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவிப்பதன் மூலம் இந்தப் போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருப்பேனென சனத் ஜெயசூர்ய நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# வலயமட்ட மென்பந்து கிரிக்கெட்; யாழ்.இந்துக் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம் —

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.


யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டிகளில் புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தை வெற்றி கொண்டது.

அதேபோல் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியை வெற்றிகொண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியும் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியை வெற்றிகொண்டு யாழ்.இந்துக் கல்லூரி சம்பியனானது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியை வெற்றிகொண்டு புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

இந்தச் சுற்றுப் போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற யாழ்.இந்துக் கல்லூரியும், கொக்குவில் இந்துக் கல்லூரியும் மாவட்ட ரீதியில் நடைபெறவுள்ள 19 வயது பிரிவு மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளன. (58)


நாவலர் கலாசார மண்டபத்தில் பாலர் கல்விக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 14 பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தமிழ், ஆங்கிலமொழி பேச்சுத்திறன் காணும் 40 ஆவது விழாவில் யாழ். கல்விக்கோட்டப் பணிப்பாளர் என்.தங்கராசா மங்கல விளக்கேற்றுவதையும், பேராசிரியர் சபா. ஜெயராசா உரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# புதிய பரிவர்த்தனை ஆழியூடாக 100 தொலைபேசி இணைப்புக்கள்

## யாழ். ரெலிகொம் ஏற்பாடு

யாழ்ப்பாணம் —

சிறிலங்கா ரெலிகொம்மின் யாழ். பிராந்திய நிலையத்தில் அடுத்தவாரம் புதிய தலைமுறை பரிவர்த்தனை ஆழி (NGN) பொருத்தப்பட்டு பரீட்சார்த்தமாக 100 இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளதாக வட வலய ரெலிகொம் பிராந்திய முகாமையாளர் வி. யோகேந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

ஒரு இடத்திலிருந்து பல பாகங்களுக்கும் துரித வலையமைப்புக்களை மேற்கொள்ளக்கூடிதான இந்தப் புதிய தலைமுறை பரிவர்த்தனை ஆழி இலங்கையில் முதலாவதாக மாத்தறையில் பொருத்தப்பட்டது. இரண்டாவதாக தற்போது யாழ்ப்பாணத்தில் பொருத்தப்படவுள்ளது.

இதன்மூலம் முதல் கட்டமாக பரீட்சார்த்த ரீதியாக 100 இணைப்புக்கள் வழங்கப்படும். தொடர்ந்து இணைப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். அத்துடன், இதன்மூலம் உள்வரும் அழைப்புக்களின் இலக்கம் (CLI) போன்ற வசதிகளுடன் சிறந்த வலையமைப்புக்களையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இதேவேளை, வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒளி கண்ணாடியிழை செயற்திட்டத்தின் கேபிள் இணைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த கேபிள் இணைப்பை துரித கதியில் பூர்த்தி செய்யும் வகையில் ஏ9 வீதியை மையப்படுத்தி, ரெலிகொம்மால் வவுனியாவிலிருந்து ஓமந்தை பக்கமாகவும், கிளிநொச்சியிலிருந்தும், யாழப்பாணத்திலிருந்தும் இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த செயற்திட்டம் ஏப்ரல் மாத கடைசியில் பூர்த்தி செய்யப்படும்.

இதன்மூலம் சாவகச்சேரி, கொடிகாமம், பளை, பரந்தன் கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தோர் ஏ.டி. எஸ்.எல் வசதிகளை கேபிள் தொலைத் தொடர்பு வலையமைப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். மேலும் இதன்மூலம் துரித வேகத்தையுடைய இன்டர்நெற் சேவையையும் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன், தற்போது யாழ். பிராந்திய நிலையத்தில் பொருத்தப்படவிருக்கும் புதிய தலைமுறை ஆழி (NGN) உடன் இந்த கண்ணாடி இழை இணைப்பையும் தொடர்பு படுத்தி பல இணைப்புக்களையும், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளையும் வழங்கக்கூடியதாக இருக்கும்.

அத்துடன், இந்த சேவை மூலம் பரந்த வலையமைப்பை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதால் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் சிறந்த பயன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (ரி)

# இறுவட்டு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கவின் கலை மன்றத்தின் தீம், தீம் இசை இறுவட்டு வெளியீட்டு விழா - நாளை காலை 9.30 மணிக்கு இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் செந்தில்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக கலாபூஷணம் எஸ்.செந்தில்நாதன், சிறப்புவிருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# தந்தையரை இழந்த நிலையில் குடாநாட்டில் 7127 சிறுவர்கள்!

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் 7127 சிறுவர்கள் தமது தந்தையர்களை இழந்திருப்பதாக புள்ளிவிபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் அநேகமானவர்கள் 12 வயதுக்குக் குறைந்தவர்கள் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் ஒரு லட்சத்து 67 ஆயிரத்து 680 சிறுவர்கள் உள்ள நிலையில், இவர்களில் தாயை இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை 2146. தந்தையரை இழந்தோர் எண்ணிக்கை 7127, தாய், தந்தையர் இருவரையும் இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை 645. சிறுவர் இல்லங்களில் தங்கிவாழும் சிறுவர்களின் எண்ணிக்கை 611 ஆகும்.

சிறுவர் உரிமை மற்றும் அவர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

# காரைநகர் பிரதேச செயலக அடிக்கல் நாட்டுவிழா இன்று

யாழ்ப்பாணம் —

காரைநகர் பிரதேச செயலகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு - இன்று பிற்பகல் 2 மணிக்கு காரைநகர் வலந்தையில் நடைபெறவுள்ளது.

இந்தப் புதிய பிரதேச செயலகத்துக்கான கட்டடம் 3 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

ஊர்காவற்துறை மற்றும் காரைநகர் பகுதிகளுக்குப் பொறுப்பான உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் (சுனாமி) பா.செந்தில் நந்தனன், வடக்கு - கிழக்கு புனர்நிர்மாணத் திட்ட யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம், மாகாண கட்டடத் திணைக்கள பிரதேச பொறியியலாளர் எஸ்.குகநேசன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக கலாநிதி க.வைத்தீஸ்வரக் குருக்கள், ஈழத்துச் சிதம்பர ஆலய ஆதீன கர்த்தாக்களான மு.சுந்தரலிங்கம், அ.அம்பலமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# திண்மக்கழிவகற்றல் குறித்த ஒரு நாள் பயிற்சிப் பட்டறை!

யாழ்ப்பாணம் —

சுத்திகரிப்புத் தொழிலுடன் தொடர்புபட்ட மாநகரசபை உத்தியோகத்தர்களுக்கான திண்மக் கழிவகற்றல் தொடர்பான ஒருநாள் பயிற்சிப்பட்டறை நேற்றுமுன்தினம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் மாநகர ஆணையாளர்சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் தற்போதைய திண்மக்கழிவு அகற்றும் முறைமையும், நடைமுறையும் அதை முன்னேற்ற வேண்டிய அவசரதேவை, திண்மக்கழிவு முகாமைத்துவமும் சுகாதாரப் பிரச்சினைகளும் தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ம.மரியதாஸனின் உரை, சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான அறிமுகம் என்பன இடம்பெற்றன.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் திண்மக்கழிவகற்றலுடன் தொடர்புபட்ட திணைக்களத் தலைவர்கள், பொதுசுகாதார பரிசோதகர்கள், மாநகரசபை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி,நி)

# றூம் ரு றீட் நிறுவனம் நடத்தும் சிறுவர் கதைப் போட்டிகள்

யாழ்ப்பாணம் —

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் வசதி குறைந்த மாணவர்களுக்கு வாழ்நாள் முழுவதுக்குமான கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அரச சார்பற்ற நிறுவனம் றூம் ரு றீட் (Room to read) எனும் சிறுவர் கதைக்கான போட்டிகளை நடத்தவுள்ளது.


இந்தப் போட்டியில் எல்லா வயது மாணவர்களும் கலந்துகொள்ளலாம். 3 வயதுக்கும், 10 வயதுக்கும் இடைப்பட்ட பிரிவினருக்கு உபயோகப்படுத்தக்கூடியவாறு விளக்கப்படங்களுடன் கூடியதாக கதைகள் அமையவேண்டும்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய ஏதாவது ஒரு மொழியில் தனியாகவோ அல்லது குழுவாகவோ இணைந்து 400 - 800 சொற்களுக்குட்பட்டதாக கதைகள் அமையவேண்டும்.

உறுதியான சமூக செயற்பாடுகளை மையமாக வைத்துக் கதைகள் எழுதப்படுவது வரவேற்கத்தக்கது. சிறந்த கதைகளுக்குப் பெறுமதியான பணப்பரிசில் வழங்கப்படுவதுடன், சான்றிதழும் மாணவர்களின் பாடசாலை நூலகங்களுக்கு புத்தகத் தொகுதியும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

கட்டுரையுடன் பெயர், வயது, தரம் பாடசாலையின் பெயர், தொடர்பு கொள்ளும் முகவரி, தொலைபேசி, மின்அஞ்சல் ஆகிய விபரங்களையும் குறிப்பிட்டு ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு முன்னர் நிகழ்ச்சி அலுவலர் றூம் ரு றீட், இல 22, இனிஷியம் றோட், தெஹிவளை என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். (101)

# தவக்கால நற்சிந்தனை



தீவினை செய்யும் மனிதனின் சொல்லுக்கு அஞ்சாதீர்கள். ஏனெனில் அவனது முகம் கழிவுப் பொருளாக மாறும். புழுவுக்கு இரையாகும். அவன் இன்று உயர்த்தப்படுவான். ஆனால் நாளை அவன் அடையாளமின்றிப் போய்விடுவான். தான் உண்டான புழுதிக்கே திரும்பிவிடுவான். அவனுடைய திட்டங்கள் ஒழிந்துபோகும். என் மக்களே திருச்சட்டத்தை கடைப்பிடிப்பதில் மன உறுதியும், வலிமையும் கொண்டிருங்கள். அதனால் மகிழ்ச்சிடைவீர்கள் என்றார்.

ஆண்டவர் யேசு ஜெருசலேம் நகரை நெருங்கி வந்த போது அதைப் பார்த்து கண்ணீர் சிந்தினார். மக்களினங்களின் பெயரைப் பதிவு செய்யும் போது யேசு இங்கேதான் பிறந்தார். பெருமைக்குரிய இடம். இத்தகைய இடத்தைப் பார்த்து இந்த நாளிலாவது அமைதிக்குரிய வழியை நீ அறிந்திருக்கக்கூடாதா? எனக் கலங்குகிறார். இவ்வளவு மேன்மைமிக்க அவரது பிறந்த இடமாகிய ஜெருசலேம் கல்லின் மேல் கல் இல்லாதபடி அழியப்போகிறதே என்பதை முன்கூட்டியே அறிந்து கண்கலங்கினார். நம்மை இறைமகன் இந்த தவக்காலத்தில் குறிப்பாகத் தேடிவருகிறார். இதனை நாம் உணருகின்றோமா? பரிசேயரான சவுல், வியாபாரியின் மகனான பிரான்சிஸ் அசிசி, பிரபு குடும்பத்தைச் சேர்ந்த லொயோலா இஞ்ஞாசியார், பேராசிரியரான சவேரியார். இவர்களெல்லாம் யேசு தேடிவந்த காலத்தை உணர்ந்து தங்கள் வாழ்வையே மாற்றிக்கொண்டார்கள். நாமும் சிந்திப்போம்.

மோ.தார்சீசியஸ்

# புதிய நிர்வாகசபை தெரிவு

தென்மராட்சி —

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தின் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு கடந்த வாரம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இடம்பெற்றது.

இந்த சங்கத்தின் புதிய தலைவராக க.சி.ஆறுமுகம், உபதலைவராக கு.கமலாதேவி, வ.கைலேஸ்வரன், செயலாளராக சி.குலசிங்கம், உபசெயலாளராக ரி.கனகலிங்கம், பொருளாளராக ச.சத்துரு சங்காரம் மற்றும் உறுப்பினர்களாக சி.கணேசன், சி.சதாசிவம், க.சி.சண்முகலிங்கம், க.கனகரத்தினம், கிருபா வீரசிங்கம், பி.பாலசிங்கம், புலன்சிறிந்திரன், ஆர்.ராமலிங்கம், சபாரட்ணம் ஆகியோரே தெரிவுசெய்யப்பட்டனர். (100)

# யோகாசனம் பயில்வதற்கு பதிவுசெய்யக் கோரிக்கை

மானிப்பாய் —

யாழ்.சிவலிங்க யோககேந்திரா நிறுவனம் நடத்திவரும் யோகாசன - தியான பயிற்சி வகுப்புக்கள் தற்போது நடைபெற்றுவருவதாக நிறுவனத்தின் இயக்குநர் க.நிஜலிங்கம் தெரிவித்தார்.

இந்த வகுப்புக்கள் இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம், கொக்குவில் சம்பியன் வீதி, வளர்மதி சனசமூக நிலையம், நீர்வேலி வடக்கு காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை ஆகிய இடங்களில் உள்ள நிலையங்களில் தமது பதிவுகளை மேற்கொள்ளாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உடல், உள, ஆன்மீக முன்னேற்றத்துக்கான இந்தப் பயிற்சிகளில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (100)

# சிறுமியை ஏமாற்றி நகை அபகரிப்பு!

அளவெட்டி —

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற திருமண நிகழ்வில் கலந்து கொண்ட மூன்றரை வயதுச் சிறுமியின் சங்கிலி, காப்பு உட்பட 6 பவுண் பெறுமதியான நகைகள் திருட்டுப் போயுள்ளன.

குறித்த சிறுமி, மண்டபத்தில் நின்ற வேளை அந்தப் பகுதிக்கு வந்த திருடன், அம்மாவிடம் கொண்டு போய் விடுகின்றேன் என சிறுமியை அழைத்துச் சென்று அருகிலுள்ள ஓட்டோ ஒன்றில் வைத்து சிறுமியின் காப்பு, சங்கிலி, மற்றும் தோடுகள் என 6 பவுண் பெறுமதியான நகைகளை திருடிச் சென்றுள்ளான்.


சிறுமியை திடீரெனக் காணாத பெற்றோர், அவரை தேடிச் சென்ற வேளை அவர் ஓட்டோ அருகில் அழுது கொண்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார்.




# சிறுகதை

# ஒரு உதிரங்களில் மலருமா சமாதானம்

**ஜோக்கியன்**



நிமிர்ந்த நிலை நேர் கொண்ட பார்வை முறுகிய மீசை... வர்ணம் தீட்டப்படாத ஓவியம் ஒன்றை தீபா வரைந்து நூலகத்தில் இரவல் பெற்ற பாரதியார் கவிதைகள் என்ற புத்தகத்துக்குள் வைத்தது தினசரிப் பத்திரிகையை தற்செயலாக பார்க்க நேரிட்ட போது நினைவுக்கு வந்தது. தீபாவுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. அதே அளவு ஆச்சரியம் தான் வரைந்த ஓவியத்தை பத்திரிகைக் காரியாலயத்துக்கு அனுப்பியது யார் என்பதை அறியும் ஆவலில் பாரதியார் கவிதைகள் தேடினாள். அந்தப் புத்தகம் இரவல் போயிருந்தது.

தீபாவுக்குள் மறைந்து கிடந்த ஓவியம் வரையும் திறமையை பத்திரிகையைப் பார்த்து அவளை சிலர் பாராட்டிய போது கூட தீபாவால் சிரிக்க முடியவில்லை. தனது சித்திரத்தை வெளிக் கொணர்ந்த சக வாசகர் யார் என்பதை நினைவில் தேடினாள்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தீபா ஓவியம் மட்டுமல்ல கவிதைகளும் எழுதுவாள். பாடசாலையில் பல மேடை நாடகங்கள், பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றி பலரது பாராட்டுக்களைப் பெற்றிருக்கின்றாள்.

ஆனால், யாரோ விளையாட்டாகச் செய்த விடயம் அவள் மனதில் அளவு கடந்த மகிழ்வைக் கொடுத்திருந்தது.

திரைப்படங்களில் சித்திரிக்கப்படுவது போல அழகிய இளைஞனாக இருக்குமோ? என்றெல்லாம் கற்பனை வானில் பறந்த தீபாவுக்கு தனது சித்தப்பாவான மதுர நாயகத்தை எப்படி நினைவில் வரும்... அவர்களுடன் இருபது வருடமாக எதுவித தொடர்புமில்லையே... அருமைநாயகம் தீபாவின் தந்தை. மதுரநாயகத்துடன் இருபது வருடத்துக்கு முன் சொத்துப் பிரச்சினையால் தந்தை பரிந்ததையும் மதுர நாயகம் தனது சித்தப்பா என்பதும் நினைவில் வந்தது. தனது ஓவியத்தைப் பத் திரிகைக்காரியாலயத்துக்கு அனுப்பியவர் சித்தப்பா என்ற உண்மையை தெரிந்த போதில் அவரை சந்தித்தாள்.

நீங்கள் ஓவியத்தை ஏன் அனுப்பினீர்கள். என் அனுமதியின்றி... என்று காட்டமாக வினாவுவது போல காட்டிக்கொண்டாள். கடந்த காலக் கசப்புணர்வுகள் தான் அவளது கேள்வியாக மேலோங்கி நிற்பதை அறிந்த மதுரநாயகம் சரியம்மா தீபா நான் பிழைவிட்டிருக்கலாம். இத்தனை வருடமாய் என் சக உதிரம் என்னைப் பார்க்காமல் பேசாமல் இருக்கிறார். எனக்குப் பிள்ளையா? குட்டியா? சொல். இல்ல சித்தப்பா நீங்கள் கோபக்காரர். அப்பாவோ அதைவிடக் கோபக்காரர். இணையாத தண்டவாளங்களாக இத்தனை காலமாய் இருக்கின்றீர்கள்.... அதுதானம்மா எமது பாசப் பிணைப்பாக நீ இருக்கின்றாய் தானே... என்றார்.

தீபா தினமும் மதுரநாயகம் வீட்டுக்கு சென்று கதைப்பது அவருக்கு ஆறுதலாக இருந்தது. உன்னதமான பாசத்தை உள்ளத்தின் ஆழத்திலிருந்து பொழிந்த மதுரம் சித்தப்பாவை ஏன் அப்பா வெறுக்கின்றார். சகோதரங்களிற்கிடையில் மகிழ்ச்சியாக வாழ்வது கடினமா என்ற விதமாக சிந்தனையில் ஆழ்ந்திருந்த தீபாவைப் பார்த்து அருமைநாயகம் என்ன பிள்ளை கடுமையா யோசிக்கிற.. என்றார்.

இந்த முறை வருடப்பிறப்பு வருகுதல்லோ அப்பா.

அதுக்கென்ன? உனக்கு புது உடுப்புக்கள் வாங்கித் தருவன் தானே தீபாக்குட்டிக்கு... என்று செல்லம் பொழிந்தவரை நோக்கி... எனக்கு புது உடுப்பும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம். இந்த வருடத்துக்கு நாங்கள் சித்தப்பா வீட்ட போகவேணும் அதுவே என் விருப்பம் என்றாள்.

உனக்கென்ன பிள்ளை விசர், கிசர் பிடிச்சிட்டுதோ. அவன் துரோகி. காதலிச்சுக் கலியாணம் முடிச்சவன் வீட்டில நாங்கள் சேர்க்கவேயில்லை. உன்ர தாத்தா பாயில வருத்தமா இருக்கேக்க கைரேகையை பதித்து சொத்துக்களைச் சுருட்டியவன். நான் இருக்கும்வரை உன்ர விருபம் நிறைவேறாது கண்டியோ... அப்பா நடந்தது நடந்து போச்சு. சித்தப்பா, சித்தியோட இந்த முறை புதுவருடம் கொண்டாட வாறிங்களோ இல்லையோ? இல்லையென்றால் நான் போகட்டோ என்று கெஞ்சினாள் தீபா. உன்ர அம்மாவின்ர செத்த வீட்டுக்குக் கூட வராத அவனோட வருஷம் கொண்டாட உனக்கு மட்டும் எப்படி ஆசை வந்தது. பேச்சில் கனிவிருந்தது. கவலையும் சேர்ந்திருந்தது.

புதிய வருடப்பிறப்புக்கு இன்னும் பத்துப் பதினொரு நாட்கள் தான் இருக்கிறது. இருபது வருடமாக பிரிந்திருந்த சகோதரர்கள் இணைய மனமின்றி இருக்கின்றனர். ஆனால், உறவுப் பாலமாக தீபா மட்டுமே போய் வருகின்றாள். தீபாவின் அசைக்க முடியாத நம்பிக்கை பிரிந்த சித்தப்பாவுடன் அப்பா சமாதானமாவார் என்று நண்பர்கள், புற இனத்தவர்களுடன் விட்டுக் கொடுப்புக்களுடன் பழகும் மனிதர்கள் ஏன்தான் சொந்த சகோதரர்களுடன் மல்லுக்கட்டி நிற்கின்றார்கள். ஒற்றுமையாய் வாழ மனங்கள் புதிதாய் உருவாகாதா? என்ற சாராம்சத்தில் ஒரு கவிதை எழுதி பத்திரிகைக் காரியாலயத்துக்கு அனுப்பி வைத்தாள் தீபா.

தீபாவுக்குத்தான் சகோதரர் பாசம் கிடைக்காதுபோனது. சகோதரர்கள் கிடைத்த மனிதர்கள் ஏன்தான் அமைதியிழக்கிறாரகளோ...

தீபாவுக்கு எதையோ சாதித்து விட்டதான திருப்தி.

* *

---

**குட்டிக் கதைகள் - 2**

# வலையின் வலி

**- வினோதரன்**



முகமாலை சோதனைச்சாவடியில் பேரூந்தில் இருந்து இறங்கி நடந்து அடையாள அட்டையைப் பதிந்தேன். அடுத்து உடற்சோதனை கூச்சப்படும் எனது உடலை எகிறியடிக்கவைத்தது.

"....உஷ் இங்கை வாங்க"

முகத்தில் சந்தனப் பொட்டுப் போட்டு தன்னை உருமாற்றியிருந்த ஒருவன் கூப்பிட்டான். தனிக் கூடாரத்திலிருந்த கதிரையைக் காட்டி அமரச் செய்தான்.

"எங்கை போறீங்க?"

".... பளைக்கு..."

"றெயினிங் எடுத்திட்டு வந்து ஆமிக்குக் குண்டெறியவா"

இல்லை யென்று பலமாகத் தலையை ஆட்டினேன். என்மனதில் என்ன இருக்கிறது என்பதை அறியுமளவிற்கு இவன் மந்திரவாதியில்லைத் தானே....

"எப்பவாறது?"

"நாளைக்குப் பின்னேரம்"

"அதுசரி சிவில் ஆக்கள் ஏன் வன்னிக்குப் போறாங்க..."

"பயம்! ஆமிக்குப் பயம்"

"சீ...நீங்க எங்களை நம்பவேணும் தானே அரசாங்கம் எல்லாம் செய்து தரும்" என்று பல திணிப்புக்களைச் செய்தான். "நம்பி நம்பிக் களைச்சுப்போனம். எங்களுக்கு உங்களிலை நம்பிக்கையில்லை" வெடுக்கெனப்பதில் சொன்னேன்.

"சரி சரி நீங்க வரும் போது எல்ரீரீண்டை டயறி ஒண்டு வாங்கி வரணும்"

சமாளித்து... தான் கூப்பிட்ட காரணத்தை மெல்லச் செருகினான்.

"இன்னும் எத்தனை நாளைக்கு எங்கடை மண்ணிலை இருக்கப் போறியோ தெரியாது? அதுக்கிடையிலை ஏன் டயறி..."

சொல்ல முடியாததை பெருமூச்செறிந்து வெளிப்படுத்தினேன்.

"என்னஅப்பிடிப் பாக்கீறீங்க... வாங்க வாங்க"

"கிடைச்சா வாங்கி வாறன்"

அந்த இடத்திலிருந்து தப்புவதற்காகச் சொன்னேன்.

தனக்கு நடந்ததை நடக்கப்போறதை புலியின்ரை டயறியிலை எழுதி வைச்சால் தான். அது செம்மையாகப் பாதுகாக்கப்பட்டு தன்ரை ஊருக்குப் போய்ச் சேரும் என்று நினைத்து விட்டான் போல...

---

# யோசனை!

ஒரு நாள் எமது வீட்டினை பூட்டிவிட்டு. உறவினர் வீட்டுக்குச் சென்று மறுநாள் திரும்பி வந்தவேளை வீட்டில் களவு போய்விட்டது. பின்பக்க கதவினை உடைத்து. உள்ளே வந்து களவு எடுத்துச் சென்று விட்டார்கள்.

பொலிஸ்காரர்களும் வந்து விசாரித்துப் போனார்கள். பத்திரிகைகளிலும் செய்திவந்து எல்லோருக்கும் பதில் சொல்லி அலுத்தும் விட்டோம்.

தூர இடத்தில் இருக்கும் மாமா கேள்விப்பட்டதும் வீட்டுக்கு வந்து.

"எவ்வளவடா போச்சு? எனக் கேட்டார்

"கிட்டத்தட்ட ஐம்பதாயிரம்"

யாரையாவது வீட்டில் காவலுக்கு இருக்கச் சொல்லவில்லையா? இல்லை மாமா... ஒரே ஒரு நாள் தானே என்று பேசாமல் இருந்து விட்டேன். வாசல் விளக்கு, அறைவிளக்கு எல்லாம் ஒளிரவிட்டிருந்தேன்.

"பட்டப்பகலில் வாசலில் விளக்கு எரிந்தால், திருடர்களுக்குப் புரியாதா? யோசனை வேண்டாமா...

மாமா பின் கதவினைப் பார்த்தார்

என்னடா கதவு இது. வயசானவன் நான் சாதாரணமாக உதைச்சா உடைந்து விழுற மாதிரி இருக்கே... இது உனக்கு தோணலையா?



விமர்சனங்கள், அறிவுரைகள் முடிந்த பிறகு மாமா விடை பெற்றார். வாசலுக்கு வந்தவர் 'ஐயோ' என அலறினார். அவர் ஓடி வந்த சைக்கிளைக்காணவில்லை. பூட்ட மறந்து போய்விட்டார். யாரோ கொண்டு போய்விட்டார்கள்.

யோசனை வேண்டாமா? என நான் மாமா விடம் கேட்கவில்லை. அது மரியாதையாக இருக்காது.

**- அன்னம் -**

# கவிதைப் படிகள்

## நிலம் தூங்கிடாது

ஏக்கப் பெருமூச்சுடன்
'ஏதிலியாய்' அவன் மீண்டும்
புறப்பட்டுப் போகின்றான்.
கைகளில் இரண்டு பையும்
தலையிலோர் பாரமுமாய்...
பெண்டில் பிள்ளைகளும்
பின் தொடர
அவன் புறப்பட்டு விட்டான்.

நேற்றைய நாட்களின்...
நினைவுகளில் உருகியபடி
தேற்றுவாரற்ற தேசத்தின்..
தீக்குழிப்பில் தேய்ந்து
பயணமாகிப் போகும்
பாவியின் பாதைதான் யாதோ?

வறுமைக்குள் உழன்ற வாழ்வை
மறுமையினால் உயிர்ப்பூட்டும்
திறமையைத் தேடுகிறான்.
கருணைதான் கிடைத்திடுமா?

உல்லாச வாழ்வுதறி
'உரிமையின்' குரலொலிக்கும்
திக்கில்... கால்கள் நகர்கிறது.

பயணங்கள்
தொடர்ந்த படியிருக்கும்
பாதைகளும்
நீண்டியபடி செல்லும்
நிம்மதியின் வாசலிலே...
நின்று நெக்குருகி
நாளை
நலங்காணும் வரையில்...
நிலந்தூங்கிடாது.
நடை ஓய்ந்திடாது!

சு.க.சிந்துதாசன்

## உன்னில் நான்

என் இனிய நண்பியே
என் இதயத்தில் பூத்த ரோஜாவே
உன்னை அடிக்கடி
நினைக்கிறேன்
என் பள்ளி வாழ்வில்
நான் உன்னோடு பழகிய
அந்த நாட்கள்
மிகவும் இனிமையானவை
நீ பழகிய அந்த நாட்கள்
என் நினைவில் நிற்கிறது இன்று
நீ நினைக்கலாம்
நான் உன்னை
மறந்து விட்டேன்
என்று ஆனால்
நீ என் இதய சுவரில்
பொறிக்கப்பட்டு விட்டாய்.

கே.துஷி

## "அந்த நாட்கள்"

மாரிமழை பொழியும்
மண்வாசமோ என்இதயம்
முழுதும் குளிரும்

மேரியோடு கப்பல் செய்து
கரைபுரண்டோடும் வெள்ளம்
மீது ஆடிஅசைந்துபோகும்
கப்பல் மேரியின் கப்பல் மூழ்கும்

என்மனம் மகிழும்
கோபப்பார்வையோடு
மேரிமுகம் மாறும்
ம்.... பெருமூச்சுடன்

என்அந்த நாள் நினைவு
புனித யாகப்பர் கோயில்
திருப்பலிப் பூசைக்கு
மேரி பூப்போட்ட வட்டச்சட்டை

தேவதைபோலதெய்வீக
ஒளிசிந்தும் பார்வையோட
புன்னகையோட மண்டாடுவாள்

பாடசாலையில் ஒன்றாய்
படிச்சு கற்பனைவானில்
பறந்து மேரியும் நானும்
காதலித்து கடைசியில்

நான் சைவம், மேரி
கிறிஸ்த்தவ மதம்
எங்கட காதலைப் பிரிச்சது

காலமறைவில் இன்று
அவள்முகம் கண்டபோது
கையில் குழந்தையோடு
வெள்ளைச் சேலையில்

மௌனியாய் மெல்லிய
புன்னகை உதிர்த்து
என்னை கடந்துபோகிறாள்
நான் காலக்குரலாகி.

தேசிய உணர்வோடு
தேசியத்துணைப்படை
வீரனாகி தேசம்மீது
காதல் கொண்டு இப்போது.

அந்த நாட்கள் இனி
வரும் என்ற ஏக்கமோடும்
மீண்டும் புதிய தேசத்தில்
சுதந்திர நாட்டினில்

மேரியோடு சேர்ந்து
வாழும் இனிய வசந்த
காலத்தை நினைத்து
என் பயணம்

- ப.பவித்திரா

## காதலித்துப்பார்...!

முதல் பேச்சில் மொழி தடக்கும்!
முடிவுரையில்லாத பேச்சு
முளைக்கும்!
நித்திரையென்பது
நித்தியமிராது!
உந்தன் தர நிரலில்...
அவனிற்கோ முதலிடம்!
அதன் பின் தாய்!!!
ஞாபகங்கள் நீளமாகும்!
ஞானம் பிறக்கும்!
'பொய்' என்பது...
பெரிதாயிராது!
உந்தன் கவிவரியில்...
இயற்கை
இலக்கியமாகும்!
உன் மனத்திரையில்
'உன்னவர்' வலம் வருவர்!
பௌர்ணமியும்
மென்பனியும்
உனதென்பாய்!
சூரியனைக் கூட
சுட்டு விட நினைப்பாய்!
நிசப்த இரவுகளில்
சப்தமிடும் இதயம்!
உனையறியாமல்
உனதுள்ளேயே பிறக்குமொன்று!
பழையன விலக்கி...
புது மனிதனாவாய்
ஒரு முறை காதலித்துப்பார்!
ஒருத்தியை
ஒருத்தனை அல்லது
இந்த பூமியின்
இடுக்குகளில் ஒழிந்திருக்கும்
ஒவ்வொரு அழகையும்...
ஒரு கணமேனும்
காதலித்துப்பார் !!!

- மணிபல்லவன்

## போலிகள்

அவர்களது
போலி அனுதாபங்களும்
சங்கடங்களாய்
சமிக்காத
இரங்கல் உரைகளும்
இனியும்
சகித்துக்கொள்ள முடியவில்லை
என்னுடையவைகளால்!

என்னைப்பற்றி
அவர்களுடையவை
விபரிக்கவும்
வியக்கவும்
அதில் வேதனைப்படவும்
என் உள்ளம் ஒன்றும்
ஊனப்படவில்லை!

எனக்குள் விழும்
ஓட்டைகளை
ஒட்ட முயலும்
அவர்களின்
இயலாமைகளுக்கு
சொல்லி வையுங்கள்
"இவைகள்"
வேதனை வெளியேறி
வெற்றி வரவழைக்கப்படும்
விடுதலைப் பாதைகள்
என்பதாக....!

- கு.பா.தீபச்செல்வன்

## வெற்றிலை நினைவுகள்

குடிசை வீட்டில்
கால் மடித்திருக்கும்
குடு குடுத்த செவிட்டுக்கிழவிக்கு
வெளிச் சத்தம் கேட்பதில்லை
வெற்றிலைதான் வெளிச்சம்.

கட்டி நின்ற பசுவில்
பால் கறந்து
சட்டியிலே காச்சியது
ஆறித்தான் கிடக்கின்றது
வாக்கு மாறித்தான் போச்சு
மறதி வந்தாச்சு.

சிவந்த எச்சிலை
சிரட்டையிலே துப்பி
கொழுந்து மடித்து
கொட்டைப் பாக்கைச் சீவ
சுண்ணாம்பு புகையிலை
சும்மா வாயில் போட்டு
அம்மம்மா ஓர்
அரைக்கும் ஆலை
இரை மீட்க முடியாத
கரையில்லா நினைவுகளை
சப்பிச் சப்பித் துப்புவதும்
துப்பித் துப்பிச் சப்பு வதுமாய்...

மூத்த மகன்
என்றொருத்தன் கடமை
முடிகிறது முதியோரில்லத்துடன்
பாவம் அவன் பிள்ளைக்கும்
அவ்விடம் நிச்சயம்

சாவதற்கு கிழட்டுச் சீவன்
காத்திருக்கின்றது
சனியன் தொலைந்தால் தான்
சவம் வேகவைத்து
சனங்களிற்கு செலவு செய்து
பெற்ற கடன் தீர்க்கும்
நினைப்பில் போறான்...!

அன்று பால் காச்சியதும்
இன்று வேல் பாச்சியதும்
ஆச்சிக்கு ஞாபகத்தில் வருகின்றது.

தன் போன்ற தவிப்புக் குரல்கள்
இங்கேயும் பலவுண்டு என்பதால்
இப்போது காதும் கேட்கின்றது

வெளியுலகம் உள்ளே
பாதுகாப்பிற்காக வென்று
பூட்டிக் கிடக்கின்றது
இங்கேயும் இவர்களிற்கு
வெளிச்சத்தம் கேட்பதில்லை
வெற்றிலைதான் வெளிச்சம்!

-ஜோ.ஜெஸ்ரின்

## முட்டிப்பார் முடிவு வரும்

*சம்பிக்கவுக்கு ஒரு மடல்*

வணக்கம் சம்பிக்கரணவக்க
ஆரைஐயா
வம்புக்கிழுக்கிறாய்.
கொம்பு சீவிவிட்ட உன்
கொமாண்டோப் படைகளை
கேட்டுப் பார்!
சூம்புக் கட்டையால்
தூசு தட்டுவது போல்
தட்டி.
எட்டி உதைத்து
எமலோகம் அனுப்பிய
எங்கள் தமிழ்
பொடிச்சியளைப் பற்றி
அறிந்திராவிட்டால்
ஐயா ரணவக்க
தப்பித் தறி கெட்டு
தலை தெறிக்க ஓடி வந்த
உன் படைச் சிப்பாய்
ஒருவனிடமாவது கேட்டுப் பார்!
புத்தன் பேர் சொல்லி
வயிறு வளர்க்கும் - உனக்கு
வெட்டிப் பேச்செதற்கு
வீண் வம்பு தானெதற்கு
முடியை நிமிர்த்தி
வெட்டிக் கதைபேசி
சும்மா கிடந்த சங்கை
ஊதிக்கெடுத்தானாம்
ஆண்டி யென்று - எங்களை
வம்புக் கிழுத்து
வகையாக மாட்டாதே!
உங்களைக் கட்டியணைத்து
சிங்களப் பேரினவாதத்தை
நிறுத்திப் பிடிக்கலாம் என்று
தப்புக் கணக்குப் போட்ட
தம்பி ராஜபக்ஷ
ஆப்பிழுத்த குரங்காக
அகப்பட்டுத் துடிக்கிறார்!
தமிழன்
குட்டக் குட்டக் குனிந்தபடி
குட்டு வாங்கியது ஒரு காலம்.
இன்று
தட்டிக் கேட்கத்
தம்பி பிரபாகரன் இருக்கிறார்
ஐயா ரணவக்க
தோசை வடையெண்டு
தொடை நடுங்கி வாழ்ந்ததெல்லாம்
நேற்றே போன கதை
கூற்றுவனுக்கும் அஞ்சாத
கொள்கை வீரக் காற்றோடு
கலக்கும்
கரும்புலிப்படை எம்மிடமுண்டு!
சும்மா பீற்றியடிக்காதே
தமிழரை யெல்லாம்
பெட்டிக்குள் போட்டு
கிளிநொச்சிக்கு உன்னால்
அனுப்ப முடியுமென்றால்
முதுகெலும்பை ஒருக்கால்
தொட்டுப் பார்த்து விட்டு
முட்டிப்பார் முடிவு வரும்.

ம.ஓவியன்

## களத்தின் நாயகனே!

இன்று நீ மாணவன்
நாளை நீ மகா கெட்டிக்காரன்
மனதைத் திடப்படுத்திக் கொள்
மலைகள் வந்தாலும் - என்
தலைகள் சுமக்கு மென்று.

நீ சாதிக்கப் பிறந்தவன் - அன்றிச்
சளைப்பதற்கல்ல.
விதி தலையில் என்பார்கள் - இல்லை
உன் நுனி விரலில் உண்டு
ஊன்றி எழுதிப்படி உனதாகும் நாளை!

பாதி பயில்கையில் சலிக்காதே
மோதி எழும் அலைகளின் பலம் - நீ
சுனாமியில் கண்டிருப்பாய் - அது போல்
சாதிக்கப் பிறந்தவன் நீ என்பதால்
பரீட்சையில் ஒரு முறை சுனாமியாய் சுழன்றிடு.

பேப்பர் திருத்துபவன் பெருமிதம் கொள்வான்
யார் இந்தத் தமிழன் என்று
நாளை நாடே கதைக்கும்.
காலையில் உன்னோடு எழுந்த பறவைகள்
பண்ணிசைத்துப் பரவசப்படும் - அப்போது
உலகறியும் நீ சாதிக்கப் பிறந்தவன் என்று

சுரேஸ்குமார்

# இதுவரையில் திறக்கப்படாத நிலையில் ஆனையிறவு உப அஞ்சல் அலுவலகம்

ஆனையிறவு

ஆனையிறவு உப அஞ்சல் அலுவலம் இதுவரையில் திறக்கப்படாததால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆனையிறவு இராணுவமுகாம் கிழக்குப் பக்கமாக விஸ்தரிப்பதற்காக நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இந்தப் பிரதேசத்திலுள்ள ஆனையிறவு உப்பளம் நிரந்தரமாக மூடப்பட்டது. தட்டுவன் கொட்டி, உமையாள்புரம் பகுதிகளை அண்டிய கிராமங்களில் குடியிருந்த மக்கள் முற்றாக இடம்பெயர்ந்த போது, ஆனையிறவு உப அஞ்சல் அலுவலகமும் மூடப்பட்டு, தற்காலிகமாகப் பளை அஞ்சல் அலுவலகத்துடன் இணைந்து இயங்கிவந்தது.

ஆனையிறவு உப அஞ்சல் அதிபர், அஞ்சல் அதிபர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டமையால், உப அஞ்சல் அலுவலகம் நிரந்தரமாகவே மூடப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் இடம்பெயர்ந்த மக்கள் சொந்தக் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ளதுடன், ஆனையிறவு உப்பளமும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் இந்த உப அஞ்சல் அலுவலகத்தை மீளத்திறந்து, இந்தப் பிரதேச மக்களுக்கு அஞ்சல் சேவையை வழங்கும்படி இந்தப் பகுதி பொதுஸ்தாபனங்கள், பொது மக்கள், அஞ்சல் திணைக்கள அதிகாரிகள் கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஆகியோருடன் பலமுறை தொடர்பு கொண்டும், 17 வருடங்களாக மூடியிருக்கும் இந்த உப அஞ்சல் அலுவலகம் இதுவரை மீளத்திறக்கப் படவில்லை.

இதனால் இந்தப் பகுதி மக்கள் தமக்குரிய கடிதங்கள் மற்றும் அஞ்சற் சேவைகளை சுமார் 15 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பரந்தன் அஞ்சல் அலுவலகம் சென்றே பெற்று வருகின்றனர்.

இடம்பெயர்ந்த வேளையில் மூடப்பட்ட அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்கள் மீண்டும் சொந்த இடங்களில் இயங்குகின்ற போது, இந்த அலுவலகம் மட்டும் திறக்கப்படாமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆனையிறவு உப அஞ்சல் அலுவலகம் வெகுவிரைவில் திறக்கப்பட்டு, இந்தப் பிரதேச மக்களுக்குரிய சேவைகளை வழங்கவேண்டுமென சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை இந்தப் பிரதேச பொதுஸ்தாபனங்கள் மற்றும் பொதுமக்கள் கேட்டுள்ளனர். (21)





சிறிலங்கா ரெலிக்கொம்மால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்குத் தொலைதொடர்பை விரிவுபடுத்தும் நோக்குடன் வவுனியாவிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் ஒளி கண்ணாடி இழை செயற்திட்ட வேலைகள் தற்போது A9 வீதியில் ஓமந்தையில் இடம் பெற்று வருவதைப் படங்களில் காணலாம். (ரி)

# சுகாதார சீர்கேடாக காணப்படும் முறிகண்டி உணவகப் பின்பகுதி!

முல்லைத்தீவு

ஏ-9 நெடுஞ்சாலையில் முல்லைத்தீவு - திருமுறிகண்டிப் பிரதேசத்தில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

முறிகண்டிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் அமைந்துள்ள உணவகங்களின் பின்பகுதிக்குத் தற்போது ஏ-9 வீதி திசை திருப்பப்பட்டுள்ளது.

இந்த வீதி ஓரத்தில் உணவகக் கழிவு வாய்க்கால்கள் - நீர் ஓடாமல் தேங்கித் துர்நாற்றம் வீசி வருகின்றன.

இதனால் வாகனங்களில் மக்கள் அந்தப் பகுதிகளால் செல்லும்போது துர்நாற்றம் உள்ளிட்ட சுகாதாரச் சீர்கேடுகளால் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை தொடர்கிறது.

இந்தச் சுகாதாரச் சீர்கேடு தொடர்பாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த உணவகங்களை அந்தப் பகுதிகளில் நிர்வகிப்போர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

பல ஆயிரக்கணக்கில் மக்கள் தரித்து, கடந்துசெல்கின்ற இந்தப் பகுதி இவ்வளவு மோசமான நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# கழிவு வாய்க்கால் அமைப்பு!

முல்லைத்தீவு

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் கிராமத்தில் ஜி.ரி.இசற் நிறுவனத்தின் நிதியுதவியுடன் 4 கிலோ மீற்றர் நீளமான கழிவு வாய்க்கால் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பிரதேசத்தில் மழைகாலத்தில் மழைநீர் நீண்டகாலமாக தேங்கி நிற்பதால், பிரதேச மக்களின் நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தது.

இதுபோன்ற நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் நோக்கிலேயே இந்தக் கழிவு வாய்க்கால் 19 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. (கு)

# வீட்டுத்திட்ட உதவிகளின்றி கறுக்காய் தீவு பகுதி மக்கள்

பூநகரி

வலம்புரி இராணுவ நடவடிக்கையால் கடந்த 1991 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து - செக்காலை, அரசபுரம், பளுவில், பத்தினிப்பாய், கருமாரி, உருத்திரபுரம், ஜெயபுரம் ஆகிய பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்கள் பூநகரி - கறுக்காய்த்தீவில் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இந்த மக்களுக்கு இடம்பெயர்ந்த போது நிவாரண உணவுப் பொருட்கள் தவிர வேறெதுவும் வழங்கப்படவில்லை. கறுக்காய்த்தீவு மக்கள் மீளக்குடியமர வந்து இதுவரை பல வீட்டுத்திட்ட உதவிகள் பூநகரிப் பிரதேசத்தின் மற்றைய பாகங்களுக்கு வழங்கிய போதிலும், இராணுவத்தினரால் அழிக்கப்பட்ட இந்தக் கிராமங்களுக்கு வீட்டுத்திட்ட உதவிகள் இதுவரை வழங்கப்படவில்லை.

குறிப்பாக செட்டிக்குறிச்சியில் 20 வீடுகளும், பரமன்கிராய் கிராம கிராம அலுவலர் பிரிவில் 30 வீடுகளும், ஆலங்கேணியில் 25 வீடுகளும், மட்டுவில் நாடு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 40 வீடுகளும் மீள் நிர்மாணத் திட்டம் 2 இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இது விடயமாக இந்தக் கிராம மக்கள் பிரதேச செயலரூடாக அரச அதிபருக்கு அறிவித்துள்ளனர். (கு)

# மருத்துவமனை மீள இயங்குவதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுப்பு!

வடமராட்சிக் கிழக்கு

வடமராட்சிக் கிழக்கு அம்பன் மருத்துவமனையை மீள இயக்குவதற்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலய நடைமுறைகள் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது என்று சுகாதார திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மருத்துவமனை அமைந்துள்ள பிரதேசம் 1995 ஆம் ஆண்டில் இருந்து இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையை புனரமைத்து மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் - பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் மருத்துவமனையை புனரமைப்பது மற்றும் அதனை இயங்க விடுவது என்பன பாதுகாப்பு வலயத்துள் நிலைகொண்டுள்ள படையினரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனத் தெரிவித்து - இந்த மருத்துவமனையை இயக்குவதற்கான அனுமதியை படையினர் மறுத்துள்ளனர்.

இதன் காரணமாக மணற்காடு, பொற்பதி, குடத்தனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமக்கான மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருப்பதாக சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

# ஈழப்பிரியன் ஞாபகார்த்த கராத்தே சுற்றுப் போட்டி!

முல்லைத்தீவு

தமிழீழ விளையாட்டுத் துறையின் ஆதரவில் ஈழப்பிரியன் ஞாபகார்த்த முல்லைத்தீவு மாவட்ட கராத்தே தெரிவுப் போட்டிகள் புதன்கிழமை முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் நிலான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை தமிழீழ கராத்தே கழகத் தலைவர் இரட்ணசோதி ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ கடற்படையின் முல்லைத்தீவு நகர தளபதி தினேஸ் ஏற்றிவைத்தார். நடைபெற்ற போட்டியில் தெரிவான வீரர்களுக்கு பரிசில்களையும், சான்றிதழ்களையும் கராத்தே ஆசிரியர்களான வசந்தன், வள்ளுவர், பிரபா விளையாட்டுத் துறை இணைப்பாளர் தளபதி தினேஸ் ஆகியோர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு போட்டி!

மாந்தை மேற்கு

மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான 2006 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் கருங்கண்டல் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு மன்னார் நெகோட் ஸ்தாபனத்தின் பிரதித் திட்டப்பணிப்பாளர் கே.இராஜரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம் கலந்து கொண்டு சிறப்பித்தார். (மோ)

# கரைவலை சம்மாட்டிமாருக்கான முக்கிய கலந்துரையாடல்!

வடமராட்சி கிழக்கு

வடமராட்சி கிழக்கு பிரதேச கடற்கரையோரங்களில் கரைவலைத் தொழில் சம்மாட்டிமார்களுக்கான - கரைவலை வழங்குவதற்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசப் பணிமனையில் தலைவர் மு.தங்கவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

கரைவலைகளை பெற விரும்புவோர் சமூசத்தில் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி சமாசத்தில் ஒப்படைப்பதுடன், அன்றையதினத்தில் சமூகமளிக்குமாறும் சமாசத்தினர் அறிவித்துள்ளனர். (21)

# பன்னங்கண்டி சுடர் முன்பள்ளியின் கௌரவிப்பு நிகழ்வும், பரிசளிப்பு விழாவும்

கிளிநொச்சி

கிளிநொச்சி பன்னங்கண்டி சுடர் முன்பள்ளியில் கடந்த வருடம் கல்வி கற்று வெளியேறிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில், முன்பள்ளி மண்டபத்தில் முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.தமிழ்ச்செல்வி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் அகவணக்கத்தைத் தொடர்ந்து, கருத்துரைகளை பன்னங்கண்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இராசேந்திரம், முன்பள்ளிகளின் மேற்பார்வையாளர் கௌசலா, முன்பள்ளி ஆசிரியை கோ.பாமினி ஆகியோர் நிகழ்த்தினர்.

அடுத்து மாணவர்களுக்கான பரிசில்களை கௌசலா இராஜேந்திரம், பாலசுப்பிரமணியம், சிவகுமார் ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி மேற்பார்வையாளர், கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண் டனர்.

இந்த முன்பள்ளியின் வருடாந்த திறனாய்வுப் போட்டி மே மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (09)

# பகுப்பாய்வுக்கென விசேட இணைப்பாளர்

கிளிநொச்சி

தமிழீழ சுகாதார சேவையினரால் உணவு, மருந்து தர நிர்ணய பகுப்பாய்வுக்கென விசேட இணைப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சோதனைச் சாவடிகளினூடாக எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுள் கொண்டு வரப்படுகின்ற உணவு, மருந்துப் பொருட்கள் தரமானதா என்பதைப் பரிசோதித்து அனுமதித்தல் மற்றும் தரமற்ற் காலாவதியான பொருட்களைத் தடைசெய்தல் போன்ற நடவடிக்கைகள் விசேட இணைப்பாளரால் மேற்கொள்ளப்படும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு கொண்டு வருகிறோம் என தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்தனர்.

# மேஜர் சதா பயிற்சி பாசறையில் கிராம மக்களுக்கான பயிற்சியகம்

முல்லைத்தீவு

முல்லைத்தீவு - தென்னியங்குளம் கிராமத்தில் கரும்புலி மேஜர் சதா தற்காப்புப் பயிற்சிப் பாசறை ஆரம்ப நிகழ்வு தென்னியங்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

கௌசல்யன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மல்லாவிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அருந்தவம் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா ஏற்றிவைத்தார்.

கரும்புலி மேஜர் சதாவின் திருவுருவப் படத்துக்கு மேஜர் சதாவின் சகோதரர் ஈகச்சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை அருந்தவம், சினனண்ணா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சின்னக்கிளி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்தப் பயிற்சி ஆரம்ப நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் பங்கு கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு
- திருக்குறள்

## நமது நோக்கு

# ஆப்பு வைக்கும் இந்தியா

சமாதான முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு - தென்னிலங்கையின் பிரதான கட்சிகளை கருத்து ஒருமைப்பாட்டுடன் செயற்படவைக்கும் முயற்சியில் இந்தியா இறங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை புதுடெல்லிக்கு அழைத்திருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சு - இதுதொடர்பாக இந்தியத் தலைவர்கள் மூலம் வலியுறுத்தவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து சமாதான முயற்சிகளில் இறங்கினால் அதற்குத் தடையாக இருக்கும் இனவாத சக்திகள் ஓரங்கட்டப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக அண்மைய உள்ளூராட்சித் தேர்தலில் ஜே.வி.பிக்குக் கிடைத்தது வெறும் 8 லட்சத்து 82 ஆயிரம் வாக்குகள்தான். ஹெல உறுமயவினரைப் பொறுத்தவரையில் 65 ஆயிரம் வாக்குகளைத்தான் பெற்றிருக்கிறார்கள்.

இந்த இரு கட்சிகளும் சேர்ந்தால் ஆகக்கூடியது 10 லட்சம் வாக்காளர்களுக்கு மேல் திரட்ட முடியாது. எனவே, பிரதான கட்சிகள் இரண்டுமே இணைந்து சமாதான முயற்சிகளை சாதகமான திசையை நோக்கி நகர்த்த முடியும் என்பதுதான் இந்திய நிலைப்பாடாக இருக்கும் எனக்கருதப்படுகிறது.

பாகிஸ்தான், சீனா என்று மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் சாயத் தொடங்கியிருப்பதால், இந்தியாவும் ஒதுங்கி நிற்கும் கொள்கையில் இருந்து சற்று மாற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு உடன்பாடு விடயத்தில் இலங்கையுடன் எட்டநிற்கும் இந்தியாவுக்கு - சீன, பாகிஸ்தானுடனான இலங்கையின் உறவு சற்றுச் சிந்திக்க வைத்திருக்கிறது.

அதுவும், இலங்கையின் ஜிகாத் குழுவுக்கு ஆயுதங்கள் வழங்கி பயிற்றுவிப்பதில் பாகிஸ்தான் உளவுத்துறை சம்பந்தப்பட்டிருப்பதாக வெளிவரும் தகவல்களுக்கு இடையில், இந்தியா ஒதுங்கியிருக்கும் நிலையிலிருந்து விலக வேண்டிய சூழலையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால், தொடர்ந்தும் தலையிடாக் கொள்கையில் இந்தியா உறுதியாக இருப்பினும், தெற்கில் அரசியல் சக்திகள் மீதான அழுத்தங்களின் மூலம் தனக்கு ஏற்படும் நெருக்கடியை தணிக்க முனைவதாகத் தெரிகிறது.

இதன் ஒரு கட்டம்தான் ரணிலை புதுடெல்கிக்கு அழைத்து மகிந்த அரசுடன் இணைந்து செயற்படுமாறு கொடுக்கப்படும் அழுத்தம் ஆகும்.

மகிந்தவும், ரணிலும் இணைந்து செயற்படும் நிலை உருவானால், அது - பாகிஸ்தான் , சீன உறவுகள் வலுப்பெறுவதற்கான வாய்ப்புக்களைக் குறைக்கும் என இந்தியா கருதக்கூடும்.

ஏனென்றால், மகிந்தவுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் தென்னிலங்கை வெற்றிகளால் எதிர்க்கட்சி பலவீனப்படும் நிலை உருவாவது, அவரைக் கட்டுப்படுத்தும் கடிவாளத்தை பறிகொடுத்த நிலைக்குள் தள்ளிவிடும்.

எனவே, பலவீனப்பட்டு நிற்கும் ரணில் - மகிந்தவுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் தென்னிலங்கை அரசியல் தளத்தை சமநிலைப் போக்குடன் நகர்த்த முடியும் என இந்தியா எதிர்பார்க்கலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை விடயத்தில் தானும் தலையிடத் தயாரில்லை. அதேவேளை - சீனா, பாகிஸ்தான் தலையீட்டையும் விரும்பவில்லை. எனவே, தனது நோக்கத்தை நிறைவேற்ற ரணிலுக்கு அழுத்தம் கொடுக்க முனைகிறது.


மகிந்தவும், ரணிலும் இணைந்து தேசிய அரசு ஒன்றை நிறுவி, சமாதானமுயற்சிகளை முன்னெடுப்பது உசிதமென புதுடெல்கி வலியுறுத்தக்கூடும். இது, தெற்கிலுள்ள சமாதான முயற்சிக்கு எதிரான சக்திகளை வாய் மூடச்செய்து விடும்.

அதேவேளை, மகிந்தவுக்கு தென்னிலங்கை மக்கள் கொடுத்திருக்கும் அங்கீகாரத்தைப் பயன்படுத்தி அவர் சமாதான முயற்சிகளில் தீவிரமாக இயங்க முடியும். ரணிலின் துணையும் அவருக்கு இருந்தால் அதுவே மிகச் சாதகமான விடயமாகும்.

இந்தவாய்ப்பை சிங்களத் தலைமைகள் பயன்படுத்தவில்லையெனில் - தமிழ் மக்கள் மட்டுமன்றி, இந்தியா கூட மாற்று வழிகளில்தான் சிந்திக்க முற்படும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், மகிந்த இப்போது பாகிஸ்தான் என்ற பொறியின் மீது இருக்கின்றார். இந்தியா இந்த பொறியின் ஆப்பை இழுத்து விட்டால் அவரது கதி...?

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்



நன்றி: ஐலண்ட்

# இலங்கை ஆட்சியாளர்களின் போக்கில் மாற்றமேற்பட வேண்டும்

## ஊர்சுற்றியார் எழுதுவது

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் முக்கியமான தரப்புகளில் முக்கியமான முடிவுகளைச் செய்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதை உணர்த்தியிருக்கிறது. இனியும் தீவிரவாதம், பயங்கரவாதம் என்று பேசிக்கொண்டிருப்பதால் நாட்டில் சமாதானத்தை ஏற் படுத்த முடியாது. ஜனநாயக வழிக்கு வந்து விட்டோம். விடு தலைப் புலிகளும் ஜனநாயக வழிக்கு வர வேண்டுமென்று ஆயுதங்களை பின்னால் மறைத்துக் கொண்டு ஆயுதப் படைகளின் நிழலில் நின்று ஜனநாயகம் பேசுபவர்களும் தங்கள் போக்கை மாற்றிக் கொண்டு தமிழர் தாயகத்து தமிழ் பேசும் மக்களின் விருப்பை நிறை வேற்ற முன்வர வேண்டும்.

அயல் நாடுகளும் சரி வெளிநாடுகளும் சரி இலங்கை மக்களில் இரு பிரிவினர் இருப்பதையும் சிங்களம் பேசும் சமூகமும் தமிழ் பேசும் சமூகமும் தத்தமது தாயகத்தில் தமது உரிமைகளுடன் சமத்துவமாக வாழ வழி காண வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து உதவ முன்வரவேண்டும் என்று என்முன் வந்தமர்ந்த நண்பர் பரதேசியார் சொன்னார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் முடிவுகளும் சரி, இதற்கு முன் நடந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளும் சரி மக்கள் தங்கள் விருப்பைத் தெளிவாகத் தெரிவிக்கவே வழி செய்திருந்தன. ஆட்சியதிகாரத்துக்குப் போட்டியிட்டவர்கள் மக்கள் அளித்த தீர்ப்பைத் தங்களுக்குச் சாதகமாக வியாக்கியானம் செய்து தமிழ் பேசும் மக்கள் அளித்த தீர்ப்பை நிராகரித்து அந்தச் சமுகத்தையே உதாசீனம் செய்தனர். தங்களுக்கு மக்கள் கொடுத்த ஆணையை நிறைவேற்றுவதற்கு வழி செய்யும் படி தமிழ் பேசும் பிரதிநிதிகள் கோரிய பொழுது தங்கள் அதிகாரபலத்தையும் படை பலத்தையும் பிரயோகித்து அடக்கி ஒடுக்க முனைந்தனர். இதன் விளைவாகத் தான் இன்றைய மோசமான நிலைக்கு நாடு வரவேண்டியதாயிற்று என்று நான் சொன்னேன்.

நீர் சொல்லுவது மெத்தச்சரி என்று ஏற்றுக் கொண்ட பரதேசியார் நடந்து முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் ஊர்மக்கள் அளித்த தீர்ப்புக்களை வைத்து இனப்பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வைக் காண்பதற்கு மகிந்த அரசு முன் வர வேண்டும்.

நாட்டைப் பிரிக்கப்பார்க்கிறார்களென்ற கோஷம் சிறிமா ஆட்சிக் காலத்தில் டட்லி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி மீதும் டட்லியின் ஆட்சிக் காலத்தில் சிறிமா டட்லி மீதும் சுமத்தப் பட்டுத் தொடர்ந்து சாத்வீகம் போராட்டக் காலத்திலிருந்து இன்று ஆயுதப் போராட்டக் காலம் வரை வந்து கொண்டிருக்கிறது. இப்பொழுதுள்ள ஒரே வித்தியாசம் - நாட்டைப் பிரிக்கப் பார்க்கிறார்கள் என்ற கோஷம். இன்று நாடு பிளவு பட்டுத் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் பெரும் பகுதி பிரிந்து விடுதலை பெற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் இயங்கியிருக்கிறது என்பதாகும்.

எனவே நாட்டைப் பிரிக்கப் பார்க்கிறார்கள் என்று கூச்சலிடுவதை நிறுத்த வேண்டும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றோ தீவிரவாதிகள் என்றோ உலக நாடுகளில் பிரசாரம் செய்து உலக நாடுகளிலிருந்து ஆயுத உதவிபெற்றுத் தமிழர் தாயகத்தின் மீது படை நடவடிக்கை எடுக்கும் சிந்தனையையும் இனி மாற்றிக்கொள்ள வேண்டும் என்று பரதேசியார் சொன்னார்.

இதுமட்டமல்ல விடுதலைப் புலிகளுக்கு மக்கள் மத்தியில் மதிப்புக் குறைந்து விட்டதென்றும் புலிகள் தங்கள் ஆயுதங்களைக் காட்டி மக்களை மிரட்டி தமது கட்டுப்பாட்டில் சில பகுதிகளை வைத்திருக்கிறார்களென்றும் கையாலாகாத அரசியல்வாதிகளும் சில ஆயுதக் குழுக்களும் ஆளும் கட்சியினரையும் அதிகாரவர்க்கத்தைச் சேர்ந்தவர்களையும் தவறாக வழிநடத்தித் தங்களது சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்களென்பதை பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் உணர வேண்டும்.

கொழும்பு ஊடகங்கள் புலி எதிர்ப்புப் பிரசாரம் செய்வதன் மூலம் அப்பாவி மக்களைத் திசை திருப்பவும் நாட்டில் அமைதியின்மை நிலவவுமே வழிவகுக்கின்றன என்பதையும் உணர வேண்டும். நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கு விடுதலைப் புலிகளுடன் இன்றுள்ள யதார்த்த நிலைமைக்கேற்ற பேச்சு நடத்தி முடிவுகாண வேண்டும். வெளிநாடுகளின் ஆயுத உதவி பெற்று விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டலாமென்றோ தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கிவிடலாமென்று நினைத்தோ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாமென்று சிந்திக்காமல் நேர்மையாக செயற்பட வேண்டிய காலம் வந்து விட்டது.

இனவாதத்தை தென்னிலங்கை மக்கள் நிராகரித்து விட்டார்கள். இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்கவை அணைத்துக் கொண்டு ஒற்றையாட்சி அமைப்பைக் கைவிட்டு மக்களிடையே புதிய இணைப்பாட்சிக்குத் தேர்தலில் ஆணை கேட்பதே மகிந்தவின் ஒரே வழி என்று சொன்னேன். பரதேசியார் நல்ல யோசனை என்று வரவேற்று கடந்த காலங்களில் நடந்தவைகளைச் சீர்தூக்கிப் பார்த்து இந்த உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் முடிவுகளிலிருந்து புதிய அத்தியாயத்துக்குள் மகிந்த அரசு புக வேண்டும். மகிந்த பாகிஸ்தானுக்குப் போயிருக்கும் போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இந்தியா அழைத்திருப்பதும் சிந்தனைக்குரியது என்று சொல்லி நடந்தார் பரதேசியார்.

## வாசகர் நோக்கு

### கட்டண வேறுபாடு ஏன்? எதற்கு?

கடந்த சில நாட்களுக்கு முன்பு ஓட்டோ உரிமையாளர் தோழர் சிவநேசன், தாங்கள் இராணுவ நடவடிக்கைகளின் பொழுதும் மிகவும் சிரமத்தின் மத்தியில் மக்களுக்கு சேவை செய்வதாக எழுதியிருந்தார். இலங்கைவாழ் தமிழ் மக்கள் அனைவரும் மிகவும் சிரமத்தின் மத்தியில்தான் வாழ்கின்றார்கள் என்பது எல்லோரும் அறிந்ததே!

மேலும், ஹர்த்தால் மற்றும் யாழ்ப்பாணத்தில் இராணுவ அசம்பாவிதங்களின் பொழுது இதே ஓட்டோ சாரதிகள்தான் அப்பாவித் தமிழ் மக்களிடம் இரண்டு, மூன்று மடங்கு வாடகை அறவிடுகின்றார்கள். இது ஏன்?

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக கண்டி தனியார் மருத்துவமனைக்கு நான் சென்றுவருகிறேன். அங்கு பஸ் நிலையத்திலிருந்து இந்து கலாசார நிலையத்துக்குச் செல்ல ஓட்டோ வாடகை ரூபா 40. பல தடவை எரிபொருள் விலை ஏற்றம் இருந்தும்கூட அங்கு இந்தக் கட்டண அறவீட்டில் ஒரு வருடத்துக்கு மேலாக எந்த மாற்றமும் இல்லை.

ஆனால் இங்கு பஸ்நிலையத்திலிருந்து நல்லூருக்குச் செல்ல ரூபா 100, 150 வரை அறவிடுகின்றனர். இந்த வேறுபாடு ஏன்?

- நல்லைக்கந்தன் அடியான்

### எம் வீட்டு படலையில் வந்து நில்லாதே!

பகையே உனக்கேன் பாதுகாப்பு வலயம். பவரான பவள் வாகனங்கள்பாயும் ஆட்லறிகள், ஆட்பலம் ஆயுதபலம் அனைத்தும் கொண்ட உனக்கேன் பாதுகாப்பு வலயம்! பகை வெல்லும் பவர் உன்னிடமிருந்தால் பலாலிக்குள் போயிரு பார்ப்போம். எம் மண்ணில் எமக்குப் பாதுகாப்புத் தரமுடியாத உமக்கேன் பாதுகாப்பு வலயம்! பக்கத்து வீட்டில் பாதுகாப்புப் படை இருந்தும் எம் வீட்டில் திருடர்கள் கூட்டம், கொலைகள் அதிகரிக்கும்! ஆள்கடத்தல்கள் அதிகரிக்கும்!

இவற்றையெல்லாம் அடக்க முடியாத உனக்கேன் பாதுகாப்பு வலயம். நாட்டைக்காக்கும் படையாக நீ இருந்தால் எதிரியின் எல்லையில் போய்நில். எம் வீட்டுப் படலையில் வந்து நிற்காதே. உன்மண்ணில் நீ இருந்தால் உனக்கேன் பாதுகாப்பு வலயம். எம்மண்ணில் நீ இருப்பதால் எமக்குகூட பாதுகாப்பு வலயம் தேவைப்படுகிறது.

- கு.குமணன் -

**இந்தக் கிணற்று நீர் பரிசோதனை ஆய்வானது 2005 ஆம் ஆண்டு நவம்பர்/ டிசம்பர் மாதங்களில் யாழ். நகரசபையுடன் சேர்ந்து GTZ, செயற்திட்ட திட்டமிடல் நிறுவனம் ஆகியவை இணைந்து நிலத்தடி நீர்ப் பாதுகாப்புச் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.**

# யாழ்.மாநகர சபை பிரதேசத்தில் குடி நீரின் தற்போதைய நிலை!



மாநகரசபைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிணறுகளிலுள்ள குடி நீரின் தரத்தை இந்தக் கட்டுரை விபரிப்பதோடு, இந்தப் பிரதேசத்தில் குடிநீரின் தரத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. யாழ். குடாநாட்டில் நுகர்வதற்கும், நீர்ப்பாசனத்துக்கும் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிணறுகளில் உள்ள நீர் ஒக்டோபரில் இருந்து ஜனவரி வரையிலான பருவப் பெயர்ச்சி மழையின் போது மீள ஊட்டப்படுகின்றன.

இந்தப் பிராந்தியத்தின் சராசரி மழைவீழ்ச்சி 1178 மில்லி மீற்றர் ஆகும். மேலும் குடாநாட்டில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு குளங்கள் நீர்த்தேக்கங்களாகச் செயற்பட்டு அடுத்துள்ள கிணறுகளில் நீரை மீளத் தேக்குவதற்கு உதவுகிறது.

இந்தப் பிரதேசத்தின் அடையற் பாறை நிலத்தடி நீரைக் களஞ்சியப் படுத்துவதற்கான சிறந்த மூலமாகச் செயற்படுகிறது.

இங்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள கிணறுகளில் கிடைக்கும் நீரின் தரமும், அதன் அளவும் இடத்துக்கிடம் வேறுபடுகின்றன. பொதுவாகக் கடற்கரைப் பிரதேசத்துக்கும், கடலேரிக்கும் அருகாமையில் உள்ள கிணறுகளில் உள்ள நீரின் தரம் உயர் உவர்த் தன்மையால் பாதிக்கப்படுகிறது.

யாழ்.மாநகரசபைப் பிரதேசத்தில் பெரும்பான்மையான மக்கள் கிணற்று நீரை அவர்களது நுகர்வுக்காகப் பயன்படுத்துவதோடு, கரையோரப் பிரதேசம், வைத்தியசாலை, சந்தை ஆகியவற்றுக்கு அருகாமையில் உள்ளமக்களுக்குக் கோண்டாவிலும், திருநெல்வேலியிலும் உள்ள நீர் வழங்கல் கிணறுகளில் இருந்து வரையறுக்கப்பட்ட மணித்தியாலங்களுக்கு மட்டும் குழாய்வழியாக குடிநீர் வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் முதலாம் கட்ட நடவடிக்கைகள் யாழ்ப்பாண மாநகரசபைப் பிரதேசத்தின் நில நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் பிரதான நடவடிக்கைகளாவன - யாழ்.மாநகரசபைப் பிரதேசத்தில் உள்ள நிலத்தடி நீரின் தற்போதைய நிலைமையையும், அவை மாசுபடுவதற்கான காரணங்களையும் விசேட கவனத்துடன் ஆராய்ந்து, இவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை விதந்துரைத்து நடைமுறைப்படுத்துதல் ஆகும்.

மேலும் நிலத்தடி நீரின் தரத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ள, அதை மாசுபடுத்தும் சில பிரதான காரணிகளாகக் காணப்பட்ட திண்மக் கழிவு, சாக்கடை மற்றும் கழிவு நீர்வடிகால் முறைமை, பொது சுகாதாரம் ஆகியவை தொடர்பாகவும் இந்தத் திட்டம் விபரமாக ஆராய்ந்தது.

**நீரின் தரத்தைச் சோதித்தல்**

யாழ்ப்பாண மாநகர சபையில் அமைந்துள்ள மாதிரிப் பிரதேசத்தின் கிணறுகளிலும், குழாய்வழி நீரிலும் உள்ள குடிநீரின் தரத்தைக் கணிப்பீடு செய்வதற்காக 11 வலயங்களில் இருந்து மொத்தமாக 64 நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இந்த மாதிரிகள் அனைத்தும் யாழ்ப்பாண தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையால் (NWSDB) முறையாக சேகரிக்கப் பட்டு, அவர்களது ஆய்வுகூடத்தில் பின்வரும் மாசுபடுத்தும் காரணிகள் பகுப்பாயப்பட்டன.

மின் கடத்தற்தன்மை - Electric conductivity (EC)
குளோரைட்டு - (Cl)
நைதரேற்று - ($NO_3$)
சல்பேற்று - ($S0_4$)
பொஸ்பேற்று - ($PO_4$)
இரும்பு - (Fe)
pH
மொத்த கோலிபோம் - (Total Coliform)
ஈ.கோலி - (E.Coli)

இந்தப் பரிசோதனையின் அடிப்படையில் மேற்குறித்த காரணிகள் அனுமதிக்கப்பட்ட மட்டத்துக்கு மேல் இருக்கும் போது, அவை பாவனைக்கு உகந்தவை அல்ல என வரையறுக்கப்படுகிறது.

மாதிரிப் பிரதேசத்தின் 11 வலயங்களிலும் இருந்து சேகரிக்கப்பட்ட பெறுபேறுகளின் சுருக்கம் கீழே தரப் பட்டுள்ளது.

பெறப்பட்ட 64 மாதிரிகளில் 41 மாதிரிகள் பாவனைக்கு உகந்தவை அல்ல எனக் காணப்பட்டுள்ளது. இந்தப் பெறுபேற்றின் அடிப்படையில் மாதிரிப் பிரதேசத்தில் உள்ள கிணறுகளின் 64% நீர் பாவனைக்கு உகந்தவை அல்ல எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

**கிணற்று நீர் மாதிரியின் பெறுபேறுகள்**

| வலய எண் | வலயப் பிரதேசம் | மொத்த மாதிரிகள் | பாவனைக்கு ஒவ்வாதவை | பாவனைக்கு உகந்தவை |
|---|---|---|---|---|
| 1 | புகையிரத நிலையப் பிரதேசம் | 11 | 7 | 4 |
| 2 | போதனா வைத்தியசாலை | 3 | 3 | இல்லை |
| 3 | மத்திய பேரூந்து நிலையம் | 3 | 3 | இல்லை |
| 4 | வேம்படிப் பிரதேசம் | 16 | 10 | 6 |
| 5 | வர்த்தகப் பிரதேசம் | 5 | 4 | 1 |
| 6 | முஸ்லிம் பிரதேசம் | 8 | 2 | 6 |
| 7 | கொட்டடி | 6 | 3 | 3 |
| 8 | நாவாந்துறை பழைய கிராமம் | 5 | 2 | 3 |
| 9 | கண்ணாபுரம் | 6 | 6 | இல்லை |
| 10 | நாவாந்துறை கடற்கரைப் பிரதேசம் | 1 | 1 | இல்லை |
| | மொத்தம் | **64** | **41** | **23** |

மேலும் இந்த மாதிரிப் பிரதேசத்தின் கிணற்று நீர் தவிர குழாய் வழியாக வழங்கப்படும் நீரும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அவற்றுள் வலயம் 11 நாவாந்துறை கரையோரப் பகுதியில் பெறப்பட்ட குழாய் நீரானது அதிகளவிலான நைதரேற்று, பொஸ்பேற்று காரணமாக பாவனைக்கு உகந்ததல்ல எனக் கணிக்கப்பட்டுள்ளது.

**நீர் மாசுபடுவதற்கான காரணிகள்.**

பாவனைக்கு உகந்ததல்ல எனக் கணிப்பிடப்பட்ட குடிநீரில் பின்வரும் மாசுபடுத்திகள் காணப்பட்டன.

- ❖ மின் கடத்தற்தன்மை
- ❖ குளோரைட்டு
- ❖ நைதரேற்று
- ❖ சல்பேற்று
- ❖ பொஸ்பேற்று
- ❖ மொத்த கோலிபோம்
- ❖ ஈ.கோலி

புகையிரத நிலையப் பிரதேசம், பேரூந்து நிலையம், வர்த்தகப் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை பழைய கிராமம், கண்ணாபுரம், நாவாந்துறை கடற்கரைப் பிரதேசம் ஆகிய இடங்களில் உள்ள கிணற்று நீர் குளோரைட்டின் உயர் செறிவினதும் மற்றும் உயர் மின் கடத்தற் தன்மையினதும் காரணமாக மாசடைந்துள்ளது.

நாவாந்துறை கடற்கரைப் பிரதேசத்திலும், மத்திய பேரூந்து நிலையத்திலும் உள்ள குழாய் நீரில் உயர் அளவில் நைதரேற்று காணப்பட்டது. முஸ்லிம் பிரதேசத்தில் உள்ள கிணற்று நீரிலும், நைதரேற்று அளவு உயர்வாகக் காணப்பட்டது. இதற்குப் பிரதான காரணம் அருகாமையில் உள்ள மலசலகூடக் கிடங்குகளில் இருந்து வரும் சாக்கடை நீரின் கசிவாகும்.

புகையிரத நிலையம், மத்திய பேரூந்து நிலையம், வர்த்தகப் பிரதேசம், முஸ்லிம் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை கடற்கரைப்பிரதேசம் ஆகிய இடங்களில் உள்ள கிணற்று நீரில் சல்பேற்றும், பொஸ்பேற்றும் உயர் அளவில் காணப்பட்டன. மேலும் திண்மக் கழிவுகள் தற்காலிகமாகச் சேகரிக்கப்படும் இடங்களுக்கு அருகாமையிலுள்ள கிணறுகளும் பொஸ்பேற்றினதும், சல்பேற்றினதும் உயர் அளவின் காரணமாக மாச டைந்திருந்தன.

பேரூந்து நிலையம், வைத்திய சாலை, தற்காலிக திண்மக் கழிவு சேகரிப்பு நிலையம் ஆகியவற்றுக்கு அருகாமையில் உள்ள கிணற்று நீர் பற்றீரியா தொற்றல் காரணமாக மாசடைந்திருந்தது. இந்தக் கிணற்று நீரில் மொத்த கோலிபோம் எண்ணிக்கையும், ஈ.கோலி பற்றீரியாவும் உயர்வாகக் காணப்பட்டன.

இந்தக் கிணறுகளில் பற்றீரியா தொற்றலுக்கான பிரதான காரணிகள் கிணறுகளுக்கு அருகாமையிலுள்ள மலசலகூடக் கிடங்குகளில் இருந்து வரும் சாக்கடை நீர்க் கசிவும் மற்றும் திண்மக் கழிவு சேகரிப்பு இடங்களில் இருந்து வரும் ஊறல்களும் ஆகும்.

நாவாந்துறை கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள குழாய்வழி நீரில் கூடிய அளவில் நைதரேற்று காணப்பட்டது. இந்தக் குழாய்வழி நீர் கோண்டாவில், திருநெல்வேலி நீர் வழங்கல் கிணறுகளில் இருந்து வழங்கப்படுகிறது.

இந்த வழங்கல் கிணறுகள் அதிசெறிவான பயிர்ச்செய்கைப் பிரதேசங்களுக்கு மத்தியில் காணப்படுகின்றன. இங்கே இந்தப் பயிர்ச்செய்கைக் குப் பிரயோகிக்கப்படும் அதிகளவு நைதரசன் பசளைகளில் இருந்து பெறப்படும் நைதரேற்றுககள் நிலத்தின் ஊடாக வடித்து, நிலத்தடி நீரின் நைதரேற்றுப் பெறுமானத்தை அதிகரிக்கச் செய்து மாசுபடுத்துகின்றது.

இவ்வாறு மாசுபடுத்தப்பட்ட நீரை தொடர்ச்சியாக அருந்துதல் சுகாதாரத்துக்கு மிகவும் கேடு விளைவிப்பதாகும். எனவே திண்மக் கழிவு முகாமைத்துவம், சாக்கடை மற்றும் வடிகால் நீரகற்றல், மலசலகூடங்களை சரியான முறையில் நிர்மாணித்தல் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நைதரசன் பாவனை, அதிகரித்த சேதனப் பசளைப் பிரயோகம் போன்ற ஒட்டு மொத்த செயற்பாடுகளின் மூலமாக இந்தப் பிரதேசத்தில் உள்ள நிலத்தடி நீர் மாசுபடுத்தலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல் அவசியமாகும்.

# பிரகாசமான எதிர்காலத்துக்கு உதவும் கணினி கற்கை நெறிகள்!

மிகவேகமாக முன்னேற்றமடைந்து வரும் கணினித்துறையில் நாளுக்கு நாள் புதிய கற்கை நெறிகள் வந்த வண்ணமே இருக்கின்றன. இதில் எவற்றை கற்றால் சிறந்த தொழில் வாய்ப்பு அல்லது வருமானத்தை பெறலாம் என்பது அநேக மானவர்களுக்குத் தெரிவதில்லை. வெறும் சான்றிதழ்களுக்காக மட்டுமே நம்மில் பலர் கணினிக் கல்வியை மேற்கொள்கின்றனர்.

இந்தச் சான்றிதழ்கள் இவர்களின் கற்றலுக்குச் சான்றாக அமையுமே தவிர, வேறெந்த பயனையும் தரப்போவதில்லை. வெறும் சான்றிதழோடு நின்று விடாமல், இவர்கள் தங்களது திறனை காலத்துக்கு ஏற்ப விருத்தி செய்ய வேண்டும். இதற்கு தமக்கு பொருத்தமான கற்கைநெறிகளை தெரிவு செய்து கற்க வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யும் கற்கை நெறிகள் இவர்களுக்கு சிறந்த எதிர் காலத்தை தரும் கைத்தொழிலாக அது அமைய வேண்டும்.

அந்த வகையில் கணினித்துறையில் சிறந்த தொழில் வாய்ப்புகளையும், வருமானத்தையும் ஈட்டித்தருகின்ற கற்கைநெறிகளை மிகக் குறுகிய காலத்துக்குள் (15 நாட்கள்) கற்று பயன்பெறும் வகையில் ஆறு சிறப்பு கற்கை நெறிகளை கிரபிக்ஸ் மற்றும் மல்ரிமீடியா கல்விகளில் பெயர்பெற்ற நிறுவனமான 'யாழ் ரெக்' தனது சிறப்பு தேர்ச்சி பெற்ற கொழும்பின் முன்னணி ஆசிரியர்களைக் கொண்டு ஏப்ரல் மாத முதல் வாரத்தில் ஆரம்பிக்கவிருக்கின்றது.

இந்தக் கற்கைநெறிகள் ஒவ்வொன்றும் இன்றைய தேவைக்கேற்ப பல புதிய மென்பொருட்களை உள்ளடக்கியதாகவும், பல புதிய நுணுக்கங்களை கற்றுத் தருவனவாகவும், ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

**DIPLOMA IN PHOTO DESIGN**

கற்கை நெறியானது புகைப்பட வடிவமைப்பு, சீராக்கல், புதுப்பித்தல், பின்னணி அமைத்தல் மற்றும் சிறப்புத் தோற்றங்களை கொடுத்தல் போன்ற நுணுக்கங்களை கற்றுக் கொடுப்பனவாக அமைந்துள்ளது.

**DIPLOMA IN WEB DESIGN**

இந்தக் கற்கை நெறியானது தற்பொழுது உலகளாவிய ரீதியில் பிரபல்யமடைந்து வரும் இணையம் (Internet) சார்ந்ததாக அமைந்துள்ளது. விளங்கக் கூறின் இணையப் பக்க வடிவமைப்பு வேலைகளுக்கு இந்தக் கற்கை நெறி பெரிதும் துணை புரிகின்றது. இதனூடாக - பக்கவடிவமைப்பு, மேம்படுத்தல், உருவாக்கம், ஒளி-ஒலியமைப்பு, அசையூட்டல் நுணுக்கங்கள் கற்பிக்கப்படும்.

அடுத்ததாக DIPLOMA IN VIDEO &SOUND EDITING கற்கை நெறியானது திரைப்பட வடிவமைப்பு, தொலைக்காட்சி விளம்பரம் அமைத்தல், பின்னணி மற்றும் நிற சீராக்கல் (Colour&Background Correction) சிறப்புத் தோற்றம் மற்றும் வேலைப்பாடுகள் அமைத்தல், இசை( ஒலி) வடிவமைப்பு மற்றும் சீராக்கல், ரீமிக்ஸ் போன்ற நுணுக்கங்களை கற்றுத்தரவுள்ளது.

**DIPLOMA IN 3D MODELING ANIMATION**

நவீன கணினித்துறையில் கற்றுத் தெரிந்திருக்க வேண்டிய இன்னொரு தொழில்நுட்பம் தான் முப்பரிமாண (3D) தொழில் நுட்பமாகும். தறபொழுது மேலைத்தேய நாடுகளில் விளம்பரத்துறை, திரைப்படத் துறை, கட்டட மற்றும் பொறியியல் நிர்மாணத்துறை, விஞ்ஞான ஆய்வுத்துறை என எத்தனையோவற்றுக்கு இந்த முப்பரிமாண தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

எனவே நாமும் இந்தக் கற்கை நெறிகளை கற்று வைத்திருப்பது பயன்மிக்கதாய் அமையும். இதற்கமைய DIPLOMA IN 3D MODELING ANIMATION கற்கை நெறியானது முப்பரிமாண வடிவமைப்பு, நிறம் மற்றும் அசைவூட்டல் (Animation) ஒளி அமைத்தல் (Lights), காட்சியமைத்தல்(Camera) திரைப்பட உருவாக்கம் போன்றவற்றை மிக விளக்கமாக கற்பித்து தரவிருக்கின்றது.

மேற் குறிப்பிட்ட துறைகளில் பிரகாசிப்பவர்கள் தெரிந்திருக்க வேண்டிய இன்னொரு விடயம் தான் DIPLOMA IN MULTIMEDIA வாகும். காரணம் மல்ரிமீடியா எனப்படும் பல்லூடக கற்கை நெறியானது குறிப்



பிடத்தக்க எல்லாத்துறைகளுக்கும் பயன்படுபவையாக உள்ளன. இந்தக் கற்கை நெறியின் நுணுக்கங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். இருபரிமாண மற்றும் முப்பரிமாண வடிவமைப்பு வேலைகள், மெருகூட்டல், பலநூற்றுக் கணக்கான சத்தங்கள் மற்றும் இசைகள் அமைத்தல் போன்றனவாகும்.

என்னதான் கணினிக் கற்கை நெறிகளை கற்று வைத்திருந்தாலும் கணினியின் செயற்பாடுகள், அதன் பாகங்கள் மற்றும் நுட்பங்கள் போன்றவற்றை தெரிந்து வைத்திருப்பது மிகப் பயனுள்ளதாய் அமையும். இதற்காக DIPLOMA IN HARDWARE TECHNICS எனும் கற்கை நெறியை கற்றிருப்பது இன்றியமையாததாகும். கணினியைப் பழுது பார்த்தல், பராமரித்தல் தேவைக்கேற்ப மேம்படுத்தல் மற்றும் கணினியின் அனைத்து செயற்பாடுகளையும் முழுமையாக கற்றுத் தருவது இந்தக் கற்கை நெறியின் குறிக்கோளாகும்.

எனவே மேற்குறிப்பிட்ட ஆறு கற்கை நெறிகளும் கணினித்துறையில் சிறந்து விளங்க கைகொடுப்பனவாக அமைவதோடு, கணினிக் கைத் தொழிலாகவும் பயன்படுகின்றது . மேலும் பத்திரிகைத்துறை, அச்சுத்துறை, விளம்பரத்துறை, கட்டட நிர்மாணத்துறைகளில் தற்பொழுது தொழில் வாய்ப்பு அதிகமாக காணப் படுவதால் இந்தக் கற்கை நெறிகள் எம்மவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தையும், வாய்ப்புகளையும் தரும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

## 136வது மைல்கல்




இந்து சமுத்திரம் சூழ்ந்த யாழ்ப்பாண களப்புக்கு அண்மையில் அமைந்துள்ளது சாவகச்சேரி.

இப்பிரதேசம், இப்போது மக்கள் தொகை செறிந்த செழிப்பான பகுதியாகியுள்ளது. மேலும் நெல், மா, வெங்காயம் போன்ற பயிர்களால் தன்னிறைவும் கண்டுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் பெற்ற சாவகச்சேரி விரைவாக விருத்தி பெறுகிறது. இந்நகரின் பொருளாதார அபிவிருத்திக்கு வலுவான தொடர்பாளராக, இப்பிரதேச மக்களின் பணத்தேவைகளை நிறைவேற்ற, கொமர்ஷல் வங்கியின் புதிய கிளை வருகிறது.

இலக்கம் 7, கண்டி வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியின் இந்தப் புதிய கிளை 2006 ஏப்ரல் 03 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.20 க்கு சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது. இதில் கலந்துகொள்ள அனைவரையும் அழைக்கிறோம்.

தொலைபேசி (முகாமையாளர்) 021-2229675 (பொது) 021-2229676-7 (தொலைநகல்) 021-2229678


**கொமர்ஷல் வங்கி**

உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

Ogilvy Outreach

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வெற்றி பெற்ற வேட்பாளர்களுடன் தளபதி கேணல் சொர்ணம் சந்திப்பு!



திருகோணமலை ——

திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம்- உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பு திருகோணமலை - மூதூர் கடற்கரைச் சேனை பொது நோக்கு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், தளபதி வசந்தன், மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன், மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துரை ரட்ணசிங்கம் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து கேணல் சொர்ணம் விளக்கியதுடன், வெற்றி பெற்றோருக்கான வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

# மனித முகத்தை ஒத்த குட்டியை ஈன்ற ஆடு



யாழ்ப்பாணம் ——

குப்பிளானில் வெள்ளாடு ஒன்று மனித முகத்தை ஒத்த முக அமைப்புடன் குட்டி ஒன்றை ஈன்றுள்ளது. நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இந்த மனிதமுக அமைப்பைக் கொண்ட அபூர்வ ஆட்டுக்குட்டியை தாயாடு ஈன்றெடுத்தது.

அபூர்வ முக அமைப்பு உடல் அமைப்புடன் காணப்படும் இந்த ஆட்டுக்குட்டியைப் பற்றி கேள்வியுற்ற பெருந்தொகையான மக்கள் அந்தக் குட்டியை நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

குப்பிளான் தெற்கு ஞானவைரவர் கோயிலுக்கு அருகில் உள்ள வீடொன்றில் வசித்துவரும் அரியமுத்து பாலச்சந்திரன் என்பவர் வளர்த்துவந்த வெள்ளாடு ஒன்றே இந்த அபூர்வ ஆட்டுக்குட்டியை ஈன்றெடுத்துள்ளது.

இந்தக் குட்டி சில மணித்தியாலங்கள் மட்டும் உயிருடன் காணப்பட்டது என்றும், பின்னர் அது இறந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

# திருமலை நகரசபைத்தலைவராக கௌரிமுகுந்தன் தெரிவு

திருகோணமலை ——

திருகோணமலை நகரசபைத் தலைவராக சுப்பிரமணியம் கௌரிமுகுந்தன் தெரிவுசெய்யப்பட்டார்.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித்தேர்தலில் பெற்ற விருப்பு வாக்குகளின் அடிப்படையிலேயே இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை நகரசபைத் தேர்தலில் ஆகக்கூடிய விருப்பு வாக்குகளை (6115) பெற்ற சுப்பிரமணியம் கௌரிமுகுந்தன் தலைவராகவும், செல்வராசா 5994 வாக்குகள் பெற்று உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதேவேளை, திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேசசபைக்கான தலைவராக 3306 விருப்பு வாக்குகளைப்பெற்ற காந்தரூபன் தலைவராகவும், 3306 வாக்குகளைப்பெற்ற சுரேஸ்குமார் உபதலைவர்ரகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# போர்நிறுத்த...

தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்துக்கு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமை வகித்தார்.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப்பேச்சுக்கள் தொடர்பாக இந்தக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கூட்டம் தொடங்கிய சி[illegible] நேரத்தில் இந்தியத் தூதுவரைத் தான் சந்திக்கச் செல்வதாகக் கூறி அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வெளியேறிவிட்டார். இதையடுத்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் கலந்து கொண்ட பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ- போர்நிறுத்த ஒப்பந்தத்தால் அரசாங்கத்துக்கு எதுவித பலனும் இல்லாதபோது, நாம் ஏன் அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரோகித போகொல்லாகம, அப்படியானால் நாம் யுத்தத்துக்குச் செல்லத் தயாரா என்று கேள்வி எழுப்ப அங்கு அமைதி நிலவியது.

அதேவேளை, இந்தக்கூட்டத்தில் எதுவித இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை. இந்தக்கூட்டத்தை நாளை மறுதினம் மீண்டும் கூடுவது என்று மட்டும் தான் முடிவு செய்யப்பட்டது.

# ஆசிரியை தாக்கி மாணவி காயம்



யாழ்ப்பாணம் ——

ஆசிரியை தாக்கியதில் காயமடைந்த மாணவி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் 15ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றிலேயே இந்த தாக்குதல் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஏழாலை மத்தியைச் சேர்ந்த ஆண்டு இரண்டில் கல்வி கற்கும் தெய்வேந்திரம் குமுதினி (வயது 7) என்பவரே ஆசிரியையினால் தலையை வாங்கில் பிடித்து மோதியதில் கண்களில் பாதிப்பேற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பருத்தித்துறையில்...

மேற்படி ஐவரும் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் தாயும் மகளும் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தபோதும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இதேவேளை - பருத்தித்துறையில் நடத்தப் பட்ட தேடுதலின்போது ரி-56 ரக துப்பாக்கி ஒன்றைக் கைப்பற்றியதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை - பருத்தித்துறை நகர்ப் பகுதி யைச் சுற்றிவளைத்த போது கைதுசெய்யப்பட்ட ஐந்துபேரையும் உடன்விடுதலை செய்யவேண்டுமென வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# சமாதான...

தலைவராக உள்ள ஜோன் குணவர்த்தனவுக்குப் பதில் பாலித கொகன்ன விரைவில் அந்தப் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

# புலிகளை வெல்ல...

இப்போது வந்து அது நடக்காது என்கிறீர்கள். இப்படிப் பேசுவது விரும்பத்தக்கது அல்ல என்றும் கோத்தபாய ராஜபக்ஷ கடிந்துள்ளார்.

மேலும், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் மீது அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் கண்டிக்கவில்லை என்றும் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதற்குப் பதிலளித்த ஹக்ரப் ஹொக்லண்ட் -

எங்களிடம் ஆதாரம் ஏதுமில்லை. எந்தவொரு ஆதாரமும் இல்லாமல் ஒரு நபரை குற்றம்சாட்ட முடியாது என்று கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது விடுதலைப் புலி போராளிகளுக்கான இராணுவ ஹெலி உதவிகள் தொடர்பாகவும் ஹொக்லண்ட் கேள்வி எழுப்பினார். கிழக்கிலிருந்து வன்னிக்கு அவர்களது தலைமைப் பீடத்துடனான சந்திப்புக்குச் செல்லும் போராளிகளுக்கு ஹெலி வழங்க இராணுவம் மறுக்கிறது என்றும் ஹொக்லண்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த கோத்தபாய ராஜபக்ஷ -

கொழும்பில் நடைபெறும் கூட்டங்களில் பங்கேற்பதற்குக்கூட இராணுவத் தளபதிகளுக்கு ஹெலி வசதிகள் வழங்கப்படுவதில்லை எனக் கூறியுள்ளார். இதையடுத்து இந்தச் சந்திப்பு முடிவுக்கு வந்தது என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவ...

படையின் பயிற்சி இயக்குனராக இருந்த எயர் கொமடோர் பாலசுந்தரம் பிரேமச்சந் திரா அந்தப் பொறுப்பில் நியமிக்கப்பட் டுள்ளார்.

அதேவேளை, பட்டலந்த இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் லோறன்ஸ் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இராணுவத் தளபதியின் நிதி இயக்குனர் பதவிக்கு மேஜர் ஜெனரல் சுமித் பாலசூரிய நியமிக்கப்பட்டிருக்கிறார்.

# நோர்வே விசேட தூதர்...

விஜயம் செய்யும் இவர், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்துவார்.

இதன்பின்னர் கொழும்பு திரும்பி - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகவும் தெரியவருகிறது.

இவர் தனது இலங்கை விஜயத்தின் போது கொழும்பில் இந்தியத் தூதுவர் நிருபமா ராவையும் சந்திப்பார்.

அதேவேளை, இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு எதிர்வரும் ஆறாம் திகதி புதுடெல்கி செல்லும் பெளயர் அங்கு இந்திய தலைவர்களுக்கு சமாதான முயற்சிகள் தொடர்பாக விளக்கமளிப்பார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரண், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் ஆகியோருடனும் இவர் பேச்சுக்களை நடத்துவார்.

விடுதலைப் புலிகள், அரசபடைகளுடன் இணைந்து செயற்படும் துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவேண்டுமென வலியுறுத்திவருவதால், அந்த விடயம் தொடர்பாக இந்தியாவின் ஆலோசனையையும் பெளயர் பெற்றுக்கொள்வார் எனத் தெரியவருகிறது.

அதேவேளை, இந்திய, பயணங்களை முடித்கொண்டு நாடு திரும்பும் வழியில் லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை எதிர்வரும் சனிக்கிழமை சந்தித்து பெளயர் இறுதிப் பேச்சுக்கள் தொடர்பாக விளக்கமளிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சுவிஸில்...

சட்டோ டி பொசே அரண்மனையில் வேறு ஒரு நிகழ்வுக நடக்கவிருக்கிறது. அத்துடன், பேச்சுக்கள் நடைபெற்ற அரண்மனையின் கூரை தாழ்வாக இருப்பதால் பேச்சுக்குழுவினரில் பலரது தலைக்கும் இடி விழுந்தது. இதையடுத்து பேச்சு நடைபெறும் இடத்தை மாற்ற முடிவு செய்யப்பட்டது.

# ஆயுதக் குழுவினரின்...

கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்தனர்.

சிவில் உடையில் கருணாகுழு என்று அழைக்கப்படும் மேலும் பல ஆயுதபாணிகளின் நடமாட்டம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினருக்கு தொடர்ந்து முறைப்பாடுகள் வந்து கொண்டிருந்தன. இந்தக் குழுவினர் வவுனியாவுக்குள்ளும் ஊடுருவியிருப்பதாக கண்காணிப்புக் குழு சந்தேகிக்கிறது.

ஜெனிவா பேச்சுக்கள் முடிவடைந்த பெப்ரவரி 23 ஆம் திகதிக்குப் பின்னர் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் மொத்தம் 11 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதில் வவுனியாவில் மட்டும் 6 பேர் கொல்லப்பட்டனர்.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக்குழுவினர் இயங்கவில்லை என்று இராணுவம் அண்மையில் தெரிவித்திருந்தது. எங்களுக்குத் தெரிந்தவரை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்தக்குழுவினர் தொடர்ந்தும் இயங்கி வருகின்றனர். ஆயுதக் குழுவினரது விடயத்தை அரசாங்கம் பாரதூரமாகக் கருத வேண்டும். கண்ணை மூடிக் கொண்டு இருக்கக் கூடாது என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலளித்து பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அனுப்பிய ஒரு பக்கக் கடிதத்தில் - கண்காணிப்புக் குழுவினர் தவறான தகவலைத் தெரிவிப்பதாகவும். அவதூறை ஏற்படுத்துவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக் குழுவினர் இயங்குவதாக ஆதாரங்களின்றி எதுவித முடிவுக்கும் கண்காணிப்புக் குழுவினர் வரக்கூடாது என்றும், இது தொடர்பாக விவாதிக்க சந்திப்பு ஒன்றை நடத்த வேண்டும் என்றும் கோத்தபாய ராஜபக்ஷ அந்தக் கடிதத்தில் கூறியுள்ளார்.

கண்காணிப்புக் குழுத் தலைவர் பதவியிலிருந்து விலகிச் செல்லுவதற்கு முன்பாக மார்ச் 30 ஆம் திகதி இந்தக் கடிதத்தை ஹக்ரப் ஹொக்லண்ட் அனுப்பியமை குறிப்பிடத்தக்கது.

Fast Track Courses

இன்று ஆரம்பம்

பிரிவு I - காலை 10.00 மணி

பிரிவு II - மாலை 6.00 மணி

AIMS

#118, Palaly Road, Thirunelveli

## மரண அறிவித்தல்

## திருமதி கொர்ணலியூஸ் மார்ஷலம்மா

சென்.ஜேம்ஸ் இளவாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கொர்ணலியூஸ் மார்ஷலம்மா (31.03.2006) வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சலமோன் - யக்கோவா தம்பதியின் அன்பு மகளும், ச.கொர்ணலியூஸ் அவர்களின் பாசமிகு மனைவியும், யசிந்தா, லூசியா, பிரான்ஸிஸ், ஜெயரட்ணம், காலஞ்சென்ற றிச்சாட் ஜேம்ஸ் மற்றும் சாள்ஸ் பேரோ ஆகியோரின் அன்புத்தாயும், அந்தோனிமுத்து, இருதயநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வேதநாயகம், எதிர்முகசிங்கம், பிறோமாவதி, கில்டா, ஜெனிற்றா றதினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,

தனிநாயகம் (தயான்), டொறின்றில்டா, றூபினஸ் அன்ரனி, யூலியன் கொண்சன்ரைன், அலிசாலேயா, றபேக்காலேயா, கொர்ணலியா, கிளாறா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் நாளை பிற்பகல் 4 மணியளவில் இறுதி ஆராதனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
வே.அ.தனிநாயகம்
(பேரன்)
(ஜெயா நெற் உரிமையாளர்)

*சென்.ஜேம்ஸ்,*
*இளவலை.*

(C/2230)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

# இரசாயனவியல் - I

(1) A, L, N என்பன ஆவர்த்தன அட்டவணையில் ஒரே ஆவர்த்தனத்தில் உள்ள மூன்று தாண்டலில்லா மூலகங்களாகும். இவற்றில் A இன் ஒட்சைட் அமிலம், L இன் ஒட்சைட் மூலம் , N இன் ஒட்சைட் மென்னமில, மென்மூல ஒட்சைட் ஆகும். இம்மூன்று மூலகங்களும் ஆவர்த்தன அட்டவணையில் அமைகின்ற ஒழுங்கில் சரியான வரிசை எது?
(1) L, A, N (2) A, L, N (3) L, N, A (4) N, L, A (5) A, N, L

(2) பின்வருவனவற்றில் d – தொகுப்பு மூலகமொன்றின் அணு எண்ணாக அமையக்கூடியது எது?
(1) 19 (2) 32 (3) 35 (4) 39 (5) 52

(3) பின்வருவனவற்றுள் 1ம் அயனாக்கற்சக்தி உயர்வாகக் காணப்படும் மூலகம் எது?
(1) O (2) N (3) F (4) Ar (5) Cl

(4) 10mg ( மில்லிகிராம் ) $NO_2$ ன் மூல் மூலக்கூறுகளின் எண்ணிக்கை யாது?
( N = 14 , O = 16 )
(1) 0.001 (2) 0.01 (3) $2.17 X 10^{-4}$
(4) $2.99 X 10^{-4}$ (5) $1.0 X 10^{-4}$

(5) Chloric ( I ) acid ன் சூத்திரம் எது?
(1) HCl (2) $HClO_4$ (3) HOCl (4) HClS (5) $HClO_3$

(6) பின்வருவனவற்றுள் எது வெப்பமிழக்கும் பல்பகுதியமன்று
(1) நைலோன் (2) பொலித்தீன் (3) P.V.C
(4) இயற்கை இறப்பர் (5) பீனோல் போமல்டிகைட் பிளாஸ்ரிக்

(7) $PbO_2$ உடன் $Mn^{2+}$ உப்பு ஒன்றை அமில ஊடகத்தில் வெப்ப மேற்றியபோது செவ்வூதா நிற கரைசல் ஒன்று உண்டாகியது. அத்துடன் $PbO_2$ ஆனது $Pb^{2+}$ ஆக மாறியது. இங்கே $PbO_2$ , $Mn^{2+}$ ஆகிய வற்றுக்கிடையே உள்ள பீசமானமாக அமைவது முறையே
(1) 3 : 2 (2) 3 : 1 (3) 10 : 2 (4) 5 : 2 (5) 2 : 5

(8) H – காலல் நிறமாலையின் சிவப்பு கோட்டிற்கு காரணம் $e^n$ கள்
1) n = 3 ⟶ n = 1 ற்கு வரும்போது
(2) n = 3 ⟶ n = 2 ற்கு வரும்போது
(3) n = 1 ⟶ n = 3 ற்கு வரும்போது
(4) n = 8 ⟶ n = 2 ற்கு வரும்போது
(5) n = 4 ⟶ n = 2 ற்கு வரும்போது

(9) $C_2H_4O_2$ ஐ மூ.கூ. சூத்திரமாகக் கொண்ட 6g சேர்வையில் உள்ள O மூலக்கூறுகளின் எண்ணிக்கை யாது?
(1) $6.022 X 10^{22}$ (2) $0.1 X 6.022 X 10^{22}$
(3) $6.022 X 10^{-22}$ (4) $3.011 X 10^{22}$
(5) மேற்கூறிய எவையுமல்ல

(10) $C_2H_6$ , $CH_4$ என்பவற்றைக் கொண்ட $20cm^3$ வாயுநிலை ஐதரோகாபன் பூரண தகனத்திற்கு உட்படுத்தியபோது $30cm^3$ வாயுநிலையான $CO_2$ பெறப்பட்டது. எனின் $CH_4$ , $C_2H_6$ வாயுக்களின் கலவையில் $CH_4$ , $C_2H_6$ என்பவற்றின் கனவளவு விகிதங்கள் முறையே (ஒரே வெப்ப அமுக்க நிலைகளில் )
(1) 2 : 1 (2) 1 : 2 (3) 3 : 1 (4) 1 : 1 (5) 1 : 3

(11) 0.1 , 0.2 , 0.3 $mol\ dm^{-3}$ செறிவுகளையுடைய HCl கரைசல்களில் இருந்து முறையே 200 , 300 , 500 ( $cm^3$ ) கள் எடுத்து ஒன்று சேர்க்கப்பட்டன. பெறப்பட்ட புதிய கரைசலின் செறிவு $mol\ dm^{-3}$ ல்
(1) 0.02 (2) 0.06 (3) 0.15 (4) 0.08 (5) 0.23

(12) ஒருமூல் சேதன மென்னமிலம் HA ன் மூலர்த்திணிவு $M\ gmol^{-1}$. எனின் இந்த ஒருமூல் மென்னமிலத்தின் Na உப்பின் Na ன் திணிவு நூற்றுவீதம் என்ன? Na = 23
(1) $\frac{23}{M} \times 100$ (2) $\frac{23}{M+22} \times 100$ (3) $\frac{23}{M+23} \times 100$
(4) $\frac{22}{M+22} \times 100$ (5) இவை எவையுமல்ல

(13) பின்வருவனவற்றுள் மின்னெதிர்த்தன்மை கூடியது எது?
(1) Cl (2) O (3) N (4) P (5) S

(14) $C_{(s)}$ ன் $\Delta H_c = b\ KJmol^{-1}$, $C_4H_{8\ (g)}$ ன் $\Delta H_c = c\ KJmol^{-1}$, $H_2O_{(l)}$ ன் $\Delta H_f = a\ KJmol^{-1}$ எனின் $C_4H_{8\ (g)}$ ன் நியம தோன்றல் வெப்ப உள்ளுறை $KJmol^{-1}$ ல் என்ன?
(1) a + 4b – c (2) 4a – b + c (3) 4 ( a + b ) – c
(4) 2a + 4b – c (5) 2 ( a + b ) + c

(15) கரைசல் X ⟹ $HNO_3$ ஐ தூய நீரில் கரைத்து அதன் செறிவு $10^{-8}$ $mol\ dm^{-3}$ கரைசல் தயாரிக்கப்பட்டது. கரைசல் Y ⟹ $Ba(OH)_2$ ஐ தூய நீரில் கரைத்து அதன் செறிவு $10^{-9}\ mol\ dm^{-3}$ கரைசல் தயாரிக்கப்பட்டது. இந்த X , Y கரைசல்களைக் கலந்து $25^0C$ வெப்ப நிலைக்கு கொண்டுவரப்பட்டது. பின்வருவனவற்றுள் உண்மையானது எது?
(1) 15ml X ம் , 30 ml Y ம் கலந்த கரைசலின் $P^H$ = 5 ஆகும்.
(2) 10ml X ம் , 50 ml Y ம் கலந்த கரைசலின் $P^H$ = 6 ஆகும்.
(3) 50ml X ம் , 10 ml Y ம் கலந்த கரைசலின் $P^H$ = 7 ஆகும்.
(4) 25ml X ம் , 25 ml Y ம் கலந்த கரைசலின் $P^H$ = 8 ஆகும்.
(5) 30ml X ம் , 15 ml Y ம் கலந்த கரைசலின் $P^H$ = 9 ஆகும்.

(16) பின்வரும் கரைசல்களின் $P^H$ ஏறுவரிசை ஒழுங்கு எது?
(a) 0.01 $mol\ dm^{-3}$ $H_2SO_{4(aq)}$ (b) 0.01 $mol\ dm^{-3}$ $NaOH_{(aq)}$
(c) 0.01 $mol\ dm^{-3}$ $NH_4OH_{(aq)}$ (d) 0.01 $mol\ dm^{-3}$ $HCl_{(aq)}$
(1) b < c < d < a (2) c < b < d < a
(3) a < d < c < b (4) c < a < b < d
(5) d < a < b < c

(17) $25^0$ C இல் தூய $Al(OH)_3$ திண்மத்தின் கரைதிறன் நீர்க்கரைசலில் x $mol\ dm^{-3}$ ஆகும். 0.1 $mol\ dm^{-3}$ NaOH நீர்க்கரைசலில் இவ் $Al(OH)_3$ ன் கரைதிறன் $25^0$ C இல் $mol\ dm^{-3}$ ல் யாது?
(1) $27x^4$ (2) $27 X 10^3 X x^4$ (3) 0.1 (4) $\left(\frac{1}{10}\right)^3$
(5) இவ்விடை எவையுமில்லை

(18) தூய $Ca(OH)_2$ ஐயும், தூய $CaCl_2$ ஐயும் $25^0$ C இல் இரசாயன ரீதியில் தூய நீரில் கரைப்பதன் மூலம் L என்னும் கரைசல் ஒன்று பெறப்பட்டது. L இலுள்ள ஒவ்வொரு கரையத்தின் செறிவும் 0.005 $mol\ dm^{-3}$ ஆகும். கரைசல் L இன் $P^H$ என்ன?
(1) கணிப்பதற்கு தரவு போதாது (2) 2.3 (3) 2.0
(4) 12.0 (5) 11.7

(19) $C_3H_6O$ எனும் மூலக்கூற்றுச் சூத்திரமுடைய சேதனச் சேர்வைக்கு எழுதக்கூடிய மூடிய கட்டமைப்புக்கள் தவிர்ந்த கட்டமைப்புக்களின் எண்ணிக்கை என்ன?
(1) 2 (2) 4 (3) 6 (4) 5 (5) 7

(20) சார் அணுத்திணிவு 30 ஐக்கொண்ட மூலகம் A யானது மூலகம் L உடன் தாக்கமுற்று $AL_3$ எனும் சேர்வையை உண்டாக்குகின்றது. 5.40g L உடன் 1.50g A சேர்ந்தால் L ன் சார் அணுத்திணிவு என்ன?
(1) 108 (2) 36 (3) 10.8 (4) 32.4 (5) 16.2





(21) $[PCl_4]^+$ ன் வலுவளவு ஓட்டில் உள்ள $e^n$ களின் எண்ணிக்கை என்ன?
(1) 5 (2) 4 (3) 9 (4) 10 (5) 8

(22) 298 K ல் ஒரு மூல மென்னமிலம் ஒன்றின் Ka பெறுமானம் $1.0 X 10^{-5}$ $mol\ dm^{-3}$. இவ் அமிலக் கரைசல் ஒன்றின் $P^H$ பெறுமானம் 11 ஆகும். $25^0C$ இல் நீரின் $K_w = 1.0 X 10^{-14}\ mol\ dm^{-6}$. எனின் இவ் அமிலக் கரைசலின் மூலர் செறிவு $mol\ dm^{-3}$ ல் யாது?
(1) 0.01 (2) 1.0 (3) 0.1 (4) 0.001 (5) தரவு போதாது

(23) A – A கவர்ச்சிவிசை = (1) , B – B கவர்ச்சிவிசை = (2) , A – B கவர்ச்சிவிசை = (3) எனக் கருதப்படும்போது பின்வரும் எக்கரைசல்களில் (1) < (3) > (2) என்றவாறு கவர்ச்சி விசை அமையாது.
(1) $H_2O$ , HCl (2) $CH_3COOH$ , நீர்
(3) $H_2SO_4$ , $H_2O$ (4) $H_2O$ , $D_2O$
(5) $CH_3CH_2OH$ , நீர்

(24) தரப்பட்ட உப்பு ஒன்றின நீர்க்கரைசல் பச்சை நிறமானது. இதற்கு செறி HCl கரைசல் சேர்த்தபோது மஞ்சள் கரைசல் பெறப்பட்டது. ஆந்த பச்சைநிறக் கரைசலிற்குள் $NH_4Cl$ , $NH_4OH$ சேர்த்து $H_2S_{(g)}$ சேர்த்தபோது கறுப்புநிற வீழ்படிவு பெறப்பட்டது. மேற்படி பச்சை , கறுப்பு நிறங்களுக்குரியவை முறையே
(1) $Cr^{3+}_{(aq}$ , CoS (2) $Ni^{2+}_{(aq)}$ , $Ni(OH)_2$
(3) $Ni^{2+}_{(aq)}$ , NiS (4) $Fe^{2+}_{(aq)}$ , $Fe(OH)_2$
(5) $Ni^{2+}_{(aq)}$ , $[NiCl_4]^{2-}$

(25) நைத்திரோணியம் அயனின் குறியீடு என்ன?
(1) $N_3^+$ (2) $N_3^-$ (3) $^-NO_3$ (4) $^-NO_2$ (5) $^+NO_2$



(26) குறிப்பிட்ட ஓர் பல்பகுதிய சேர்வையின் அமைப்பலகு

அமைவன எவை?
(1) 
(2) 
(3) 


# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

(4) 

(5) வேறு கட்டமைப்புக்கள்

(27) குறித்த சேதனச்சேர்வை ஒன்று Cu $300^0C$ யில் தொழிற்படுத்தியபோது பெறப்பட்ட விளைவிற்கு HBr உடனான தாக்கத்தில் பெறப்பட்ட விளை வானது $AgNO_{3\,(aq)}$ உடன் விரைவாக வீழ்படிவைக் கொடுத்தது. எனின் அந்த ஆரம்பச்சேர்வையாக இருக்கக்கூடியது எது?


(1) 
(2) 

(3) 
(4) $(CH_3)_3-C-Br$
(5) $(CH_3)_3-C-OH$

(28) பின்வருவனவற்றின் மூல இயல்பை ஏறுவரிசைப்படுத்தும் சரியான ஒழுங்கு எது?

$A = CH_3CH_2CONH_2$ $B = CH_3NH_2$
$C = (CH_3)_2NH$ $D = C_6H_5NH_2$

(1) D < A < B < C (2) B < C < A < D (3) A < D < C < B
(4) A < D < B < C (5) B < C < D < A

(29) 

இங்கே A, B, Y ற்கு பொருத்தமான தாக்குபொருட்களும் , X இன் கட்டமைப்பும் முறையே

(1) HCl , CuCN , $NH_3/\Delta$ , $CH_3CH_2Cl$
(2) $PCl_5$ Δ , CuCN / HCl , $NH_3/\Delta$ , $CH_3CH_2CN$
(3) $PCl_5$ Δ , அற் KCN , $CH_3CH_2CN$ , Na / Et – OH
(4) அற் KOH , $PCl_5$ Δ , $CH_3CH_2CN$ , Na / Et – OH
(5) $PCl_5$ Δ , அற் KCN , Na / Et – OH , $CH_3CH_2CN$

(30) பென்சீன் வளையத்தைக் கொண்டுள்ளதும் C , H, O என்பவற்றை மிகவும் இழிவு எண்ணிக்கையில் வைத்திருப்பதுமான சேதனச்சேர்வை ஒன்றிற்கு எழுதக்கூடிய கட்டமைப்புக்களில் மூன்று கட்டமைப்புக்கள் $NaOH_{(aq)}$ ல் கரைந்தன. இன்னொரு கட்டமைப்பு $NaOH_{(aq)}$ ல் கரையவில்லை. ஆனால் Na உடன் தாக்கம் புரிந்தது. வேறு ஒரு கட்டமைப்பு $NaOH_{(aq)}$ ல் கரையவுமில்லை Na உடன் தாக்கம் புரியவுமில்லை. எனவே இவற்றைத் திருப்தி செய்யக்கூடிய மூலக்கூற்றுச் சூத்திரமாக அமையக்கூடியது

(1) $C_6H_6O$ (2) $C_7H_6O_2$ (3) $C_7H_8O_2$
(4) $C_9H_{10}O_2$ (5) $C_7H_8O$

31) – (40) வரையில் a , b சரியெனின் → (1) , b , c → (2) , c , d → (3) , a , d → (4) , வேறு → (5) என்ற ஒழுங்கு முறையைப் பின்பற்றுக.

(31) 300K வெப்பநிலையிலும் $1 X 10^5 Nm^{-2}$ அமுக்கத்திலும் பின்வருவனவற்றில் எவற்றின் அடர்த்திகள் ஏறத்தாழ சமனாக இருக்கும்
a) $C_2H_{4\,(g)}$ b) $H_2Se_{(g)}$ c) $C_2D_{2\,(g)}$ d) $^{14}CD_{4\,(g)}$

(32) ஆய்வுகூடத்தில் $O_{2\,(g)}$ இன் மூலர்க்கனவளவு துணிவதற்கு எடுக்கப் படவேண்டிய அளவீடு கள் பின்வருவனவற்றுள் எது / எவை?
a) வாயுவின் திணிவு b) வாயுவின் வெப்பநிலை
c) வாயுவின் கனவளவு d) வாயுவின் மூ.கூ. திணிவு

(33) தூயநீரின் 500 $cm^3$ இற்கு HCOOH இன் 1 mol சேர்க்கப்பட்டது. பின் வருவனவற்றுள் எது / எவை உண்மையானது / உண்மையானவை?
a) கரைசலின் $[H^+] > [OH^-]$
b) கரைசலின் $P^H > 7$
c) கரைசலின் $[H^+]$ அண்ணளவாக 2 mol $dm^{-3}$
d) நீர்க்கரைசலில் HCOOH பூரணமாக கூட்டற்பிரிகை அடையாது.

(34) பின்வருவனவற்றுள் பச்சைவீட்டு விளைவுடன் தொடர்புடைய வாயுக்கள்
a) $CO_2$ b) $NO_2$ c) NO d) $N_2$

(35) எதனோல் நீர் கொண்ட கரைசலொன்றில் எதனோலின் மூலப்பின்னம் 0.60 ஆகும். இங்கே
a) கரைசலில் எதனோலின் நிறைச்சதவீதம் 0.35%
b) கரைசலில் முழுமையாக O ன் திணிவு 160 gr.
c) கரைசலில் முழுமையாக H ன் திணிவு 24 gr.
d) கரைசலில் C ன் திணிவுச்சதவீதம் 20%

(36) பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை எது / எவை?
a) ஒரு கரைசலின் $P^H$ மறைப்பெறுமானத்தை எடுக்க முடியும்.
b) $P^H$ ஏன்பது $[H^+]$ மட்டும் தங்கியுள்ளது.
c) நடுநிலைக் கரைசல் ஒன்றின் $P^H$ ,7 இலும் குறைவாக இருக்க முடியும்.
d) ஒரு கரைசலின் $P^H$ மறை ( - ) பெறுமானத்தை எடுக்க முடியாது.

(37) $LiAlH_4$ இனால் தாழ்த்தப்படக்கூடியது / கூடியவை எது / எவை?
a) $CH\equiv CH$ b) $CH_3CHO$ c) $CH_3CONH_2$ d) $CH_2=CH_2$

(38) பின்வரும் தொடர்புகளில் தவறல்லாதவை எவை?
$N_{2\,(g)} + 3H_{2\,(g)} \rightleftharpoons 2NH_{3\,(g)}$ எனும் சமநிலைத் தாக்கத்தில்
a) $K_p = K_c RT^{-2}$ b) $K_c = K_p (RT)^{-2}$
c) $K_c = K_p (RT)^2$ d) $K_p = K_c (RT)^{-2}$

(39) பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை எது / எவை?
இது $Mg_{(s)} / Mg^{2+}(1\,mol\,dm^{-3}) // Cu^{2+}(1\,mol\,dm^{-3}) / Cu_{(s)}$ கலம் தொடர்பானது.
a) Mg மின்வாய் கதோட்டாகும் b) Mg ல் ஒட்சியேற்றம் நடைபெறும்
c) Mg மின்வாயிலிருந்து Cu மின்வாயிற்கு புறச்சுற்றில் மின்னோட்டம் செல்லும்.
d) Cu மின்வாயில் தாழ்த்தல் நடைபெறும்.



(40) $CuSO_{4\,(aq)}$ ஐ Cu மின்வாய் கொண்டு மின்பகுக்கும் போது பின்வருவனவற்றுள் சரியானது/ சரியானவை எது / எவை?
a) கரைசலின் நீலநிறம் குறையும் b) கதோட்டில் Cu படியும்
c) $P^H$ மாற்றமடையும். d) அனோட்டில் Cu படியும்



(41) பின்வருவனவற்றுள் எந்த அமோனியம் உப்பைச் சூடாக்கும் போது $N_2$ வாயு கிடைக்கும்?
(1) $(NH_4)_2CO_3$ (2) $NH_4NO_2$ (3) $NH_4NO_3$
(4) $NH_4Cl$ (5) $Cu(NH_3)_4Cl_2$


(42) $[CuCl_4]^{2-}$ , $[COCl_4]^{2-}$ என்பவற்றின் நிறங்கள் முறையே
(1) நீலம் , மஞ்சள் (2) மஞ்சள் , பச்சை (3) நீலம் , பச்சை
(4) பச்சை , இளம்சிவப்பு (5) மஞ்சள் , நீலம்

(43) பின்வருவனவற்றுள் சரியான தொடர் எது?
(1) $SnCl_2$ , $PbCl_2$ , $BeCl_2$ யாவும் அயன் பிணைப்புடையவை.
(2) MgO , $Al_2O_3$ , CO யாவும் மூல ஒட்சைட்டுக்களாகும்.
(3) $N_2O$ , $NO_2$ , NO யாவும் அமில ஒட்சைட்டுக்களாகும்.
(4) CdS , $As_2S_3$ , NiS யாவும் மஞ்சள் நிறம்.
(5) $MnO_2$ , $Al_2O_3$ , BeO யாவும் ஈரியல்புடையவையாகும்.

(44) தரப்பட்ட ஐதரோகாபன் சேர்வையொன்று கேத்திரகணித , ஒளியில் சம பகுதியங்களைக் காட்டுகின்றது. பின்வருவனவற்றில் அது எது?

(1) 
(2) 

(3) 
(4) 



(5) 



(45) $CH_3COOH_{(aq)}$ ற்கும் $NAOH_{(aq)}$ ற்கும் ( இரண்டும் 0.5 mol $dm^{-3}$) இடையிலான நடுநிலையாக்கலின் போது பாவிக்கக்கூடிய சிறந்த காட்டி எது?

| (1) A | (2) B | (3) C | (4) D | (5) E | ← காட்டி |
|---|---|---|---|---|---|
| 3.0 – 5.0 | 3.0 – 4.0 | 2.9 – 4.6 | 8.3 – 10.0 | 9.3 – 11.0 | ← $P^H$ வீச்சு |

(46) தரப்பட்ட அசேதன உப்பு ஒன்று வெண்ணிறமுடையது. இதை வெப் பப்படுத்திய போது கபிலநிற வாயுவும், $O_{2\,(g)}$ உம் பெறப்பட்டன. இதன் கரைசல் செறி HCl உடன் வீழ்படிவைத் தரவில்லை. எனினும் ஐ $H_2SO_4$ சேர்க்க வெண்ணிற வீழ்படிவு பெறப்பட்டது. எனவே அந்த ஆரம்ப உப்பும் , இறுதி வீழ்படிவும் முறையே
(1) NaCl உம் $Na_2SO_4$ உம் (2) $Zn(NO_3)_2$ உம் ZnS உம்
(3) $Pb(NO_3)_2$ உம் PbS உம் (4) $Pb(NO_3)_2$ உம் $PbSO_4$ உம்
(5) $Ca(NO_3)_2$ உம் $CaCO_3$ உம் ஆகும்.

(47) 3 – brmo – 4 – formyl – 2 – pentenoyl chloride ன் கட்டமைப்பு எது?

(1) 
(2) 

(3) 
(4) 

(5) இவை எவையுமில்லை

(48) $H-\overset{a}{C}\equiv\overset{b}{C}-\overset{c}{C}H_3$ தொடர்பாக
(1) 4 σ பிணைப்புக்கள் உண்டு (2) a , b , c கள் $Sp^2$ கலப்புடையவை
(3) 4π பிணைப்புக்கள் உண்டு (4) x காபன் Sp கலப்புடையது
(5) 8 பங்கீட்டுப் பிணைப்புக்கள் உண்டு (தொடரும்)

ஆசிரியர் : அ.லோகநாதன் B.Sc. , P.G.D.E
யாழ். மத்திய கல்லூரி.